Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 27 வெள்ளிக்கிழமை (11.01.2013) பக்கங்கள் 20 ஓசை – 103











## வடமராட்சியில் "உதயன்" தீக்கிரை விநியோகப் பணியாளர் மீதும் தாக்குதல்



யாழில் இருந்து வெளிவரும் "உதயன்" பத்திரிகை வடமராட்சிப் பகுதிக்கு விநியோகத்துக்காக எடுத்துச் செல்லப்பட்டபோது வழிமறிக்கப்பட்டு அப்பத்திரிகைகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு நடுவீதியில் போடப்பட்டு தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று

(19) ஆம் பக்கம் பார்க்க


## அநாகரிக செயலுக்கு ஈ.பி.டி.பி. கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் உதயன் பத்திரிகை எரியூட்டப்பட்டதும் அப்பத்திரிகையின் விநியோகப் பணியாளர் தாக்கப்பட்டதும் நாகரிக உலகில் அனுமதிக்க முடியாத செயல் என்றும் மிக வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய சம்பவம் என்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை வடமராட்சியில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் எந்தப் பத்திரிகை என்றாலும் சரி அப்பத்திரிகை வெளியிடும் செய்திகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பாக யாருக்காவது முரண்பாடுகள் இருப்பின் அவை தொடர்பாக சட்ட ரீதியானதும், ஜனநாயகப் பண்புகளுடனான அணுகு முறைகளைப் பின்பற்ற வேண்டுமே ஒளிய



நாகரிக உலகுக்கு ஒவ்வாத காட்டு மிராண்டித்தனமான வன்முறை நடவடிக்கைகளை மேற்கொள்வதை எமது கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## செஞ்சோலை சிறுவர் இல்லம் மீண்டும் கிளிநொச்சியில்

(முல்லைத்தீவு)

கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னர் இயங்கி வந்த செஞ்சோலை சிறுவர் இலலம் 3 வருடங்களின் பின்னர் மீளவும் இயங்கவுள்ளது. யுத்த அனர்த்தத்திற்கு முன்னர் கிளிநொச்சி திருவையாறு பிரதேசத்தில் இயங்கிவந்த இச்சிறுவர் இல்லம் எதிர்வரும் 20 ஆம் திகதி அதே இடத்தில் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் வடக்கு கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்றுப்

(19) ஆம் பக்கம் பார்க்க

# குற்றப் பிரேரணை விவாதம் நாடாளுமன்றில் ஆரம்பம்

## எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் கடுமையான எதிர்ப்பிற்கு மத்தியிலும் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை குறித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை மீதான விவாதம் நேற்றைய தினம் நாடாளுமன்றில் ஆரம்பமாகியது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை தொடர்பில் இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது அறிக்கை தொடர்பில் ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தின் போது எவரும் எதிர்ப்புத் தெரிவிக்காததால் இதனை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று அர்த்தப்படுவதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப் பிரேரணை மீதான விவாதம் நேற்று இடம்பெற்ற நிலையில், எதிர்க்கட்சியினருக்குக் கிடைக்காத அறிக்கையொன்றைப் பற்றி நாடாளுமன்றத்தில் எவ்வாறு விவாதிப்பது என்று சபையில் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தெரிவுக்குழுவின் அறிக்கை தொடர்பில் ஆராய தங்களுக்கு ஒருமாத கால அவகாசம் வேண்டும் என்றும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதனால், சபையில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. இதனையடுத்து சபையை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைத்த சபாநாயகர், எதிர்க்கட்சியினரின் கோரிக்கைக்கு பின்னர் பதிலளிப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில், சற்று நேரத்துக்கு பின்னர் சபை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. இதன்போது கருத்து வெளியிட்ட சபாநாயகர், குற்றப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## நம்பிக்கையில்லாத் தீர்மானம்; அவதானிக்கிறது அமெரிக்கா

(வோஷிங்டன்)

இலங்கையின் முதல் பெண் பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத்திணைக்களப் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட் தெரிவித்துள்ளதாவது,

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து நாம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். நீதிமன்றின் மீது அரசாங்கம் பிரயோகித்து வரும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை விவகாரத்தில் ஐ.நா.விற்கு பாரிய சவால்

### மனம் திறக்கிறார் விஜய் நம்பியார்

(ஜெனிவா)

இலங்கை விவகாரம் தொடர்பாக ஐ.நா. பாரிய சவால்களை எதிர்நோக்கியதாகப் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் முன்னாள் பிரதம பாதுகாப்பு அதிகாரியும் தற்போது மியன்மாருக்கான விசேட பிரதிநிதியுமான விஜய் நம்பியார் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொதுமக்கள் பாதுகாப்பு விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பங்களிப்பை மேம்படுத்த வேண்டியுள்ள தேவை எழுந்துள்ளது. முரண்பாட்டு நிலைமைகளின் போது பொதுமக்களைப் பாதுகாப்பது தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு பாடங்களைக் கற்றுக்கொண்டு வருகிறது. அத்துடன்

(19) ஆம் பக்கம் பார்க்க

## இன்றைய 5ஆம் பக்கத்தில்...

### விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 18



தமிழ்ச்செல்வன் பிரபாகரனிடம் நேரில் இந்த விடயம் தொடர்பாகக் கூறியபோது கடும் ஆத்திரம் அடைந்த பிரபாகரன்,

■ வே. அர்ச்சுணன்

இதனை அடுத்து அவரிற்கு தோன்றிய நப்பாசையின் வெளிப்பாடாக யாழ்ப்பாணத்தில் ஒரு வானொலியை இயங்க வைப்பதற்கும் அதற்குரிய உதவிகளையும், அனுமதியையும் புலிகளிடம் பெறுவதற்கும் அனுமதி கோரியிருந்தார். இவரின் கோரிக்கையை தான் தலைவரிடம் எடுத்து விளக்குவதாகவும் எப்படியும் அனுமதியை பெற்றுத் தருவேன் எனவும், அன்ரன் பாலசிங்கம் யாழ்ப்பாணத்தில் முன்னணி பத்திரிகை என்று கூறும் பத்திரிகையின் வித்தியாசமான ஆசிரியரிடம் உறுதியளித்திருந்தார். இவ்விடயம் தமிழ்ச் செல்வனிடம் கூறப்பட்ட போது தலைவர் இதற்கு ஒருபோதும் உடன்பட மாட்டார். சில வேளைகளில் தலைவர் உடன்பட்டாலும் பொட்டம்மான், ஒரு

## அபிவிருத்தி அதிகாரிகளாக பத்தாயிரம் பட்டதாரிகள் நியமனம்

ஒருவருட காலத்திற்கு தற்காலிகமாக அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பயிற்சிப் பட்டதாரிகளை அபிவிருத்தி அதிகாரிகளாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பில் அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவலகள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன முன்வைத்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. இதன்படி 10,000 பயிற்சி பட்டதாரிகள் அபிவிருத்தி அதிகாரிகள் என்ற அடிப்படையில் அரச சேவையில் நிரந்தரமாக்கப்படவுள்ளனர். இவர்களுக்கு நிர்வாகசேவை திணைகளத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பதவிகள் வழங்கப்படவுள்ளன. இதேவேளை, 2005 ஆம் ஆண்டு தொழில்நுட்பக் கல்லூரியில் நான்கு வருட டிப்ளோமா பாடநெறியை தொடர்ந்தவர்களுக்கும் நிரந்தர அரச நியமனம் வழங்கப்பட்டவுள்ளது.

# இசைத்துறை மாணவர்களுக்கு சோதனை; அசௌகரியங்களை அகற்றக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் இசைத்துறையில் கல்வி பயிலும் இறுதிவருட மாணவர்கள் தாம் ஆற்றுகைப் பரீட்சையில் அசௌகரிய நிலையை எதிர்கொண்டுள்ளதாக 27 மாணவர்கள் கையொப்பமிட்ட கடிதமொன்றை இசைத்துறைத் தலைவர் ஊடாக யாழ். பல்கலைக்கழக துணை வேந்தரிடம் கையளித்துள்ளனர்.

குறித்த பரீட்சை தொடர்பாக அம்மாணவர்கள் தாம் எதிர்நோக்கியுள்ள அசௌகரியம் தொடர்பாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி திட்டமிட்டபடி மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நாமும், அதை நடத்துவதற்கு இசைத்துறை நிர்வாகமும் தயார் நிலையில் இருந்தது.

எனினும் கலைப்பீடாதிபதியின் திடீர் உத்தரவினால் பரீட்சைகள் நிறுத்தப்பட்டன. மாணவர் சங்கத்தினரை கடிதம் மூலம் இப் பரீட்சைக்கு மட்டும் அனுமதிக்கும்படி கேட்டிருந்தோம்.

அடுத்த நாள் பரீட்சைகள் நடைபெறுமென ஆர்வத்தில் முதல் நாள் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி வரை நாம் ஒத்திகைகளை விரிவுரையாளர்களுடன் இணைந்து நடாத்தியிருந்தோம்.

இந்நிலையில் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் பரீட்சைகள் தொடங்க இருப்பதாகப் பத்திரிகைகளில் அறிந்தோம். 1998 ஆம் ஆண்டு முதல் ஆற்றுகைப் பரீட்சைகள் எவ்வாறு நடைபெற்று வருகின்றனவோ அதே போல் நாம் பரீட்சை செய்ய ஆவலாக உள்ளோம். ஆனால் எமது கலைப்பீடாதிபதி வழமைக்கு மாறான 3 தடை உத்தரவுகளை வழங்கியுள்ளார்.

அதில் ஒலிபெருக்கி வசதியைப் பயன்படுத்தக்கூடாது, இசைத்துறை மாணவர்கள்கூட பார்வையாளர்களாக இருக்கக்கூடாது, மாணவர்களின் பெற்றோர்கூட பார்வையாளர்களாக இருக்கக்கூடாது என்ற மூன்று செயற்பாடுகளும் வழமைக்கு மாறானவை. அத்துடன் ஆற்றுகைப் பரீட்சைக்கு பாதகமானவை.

இம்மூன்று தடையுத்தரவுகளும் நீக்கப்படும் வரை ஆற்றுகைப் பரீட்சையை பகிஷ்கரிக்க வுள்ளோம். அத்துடன் நாம் இப் பரீட்சைக்கு இசைத்துறைக்குரிய ஒலிபெருக்கி சாதனங்களை மட்டும் பயன்படுத்தியே டிசம்பர் 3 ஆம் திகதி தோற்ற இருந்தோம். எனவே வழமைபோல் இப்பரீட்சைக்கு தோற்ற ஆவன செய்யுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறோம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மின் தடை அறிவித்தல்

இன்று காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் கீரிமலை அண்ணாசிலையடிப் பிரதேசம், மாலு சந்தி முதல் துலாக்கட்டு மடத்தடி வரையான பிரதேசம், சாமியன்அரசடி முதல் சம்பந்தர் கடை வரையான பிரதேசம், நயினாதீவு பிரதான வீதிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் நாளை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் குஞ்சர்கடையின் ஒரு பகுதி, நவிண்டில், பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, உடுப்பிட்டி, நயினாதீவு பிரதான வீதிப்பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்படும்.

அதேவேளை ஏற்கவே அறிவித்த இடங்களுக்கு மேலதிகமாக வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்கள் இடம் நகர்த்த வேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மின் மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் புனரமைப்பு வேலைகளுக்காகவும் 12.01.2013 சனிக்கிழமை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், அராலி, காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம் மற்றும் பளை நகரப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.

## கண்டாவளையில் புதிய பணிமனை

கிளிநொச்சி கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் 17.5 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்த இவ்அலுவலகம் தற்போது புதுப்பொலிவுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதைவிட 8.759 மில்லியன் ரூபா செலவில் வைத்திய அதிகாரி விடுதியும் புனரமைக்கப்பட்டு வருவதுடன் விரைவில் பூர்த்தியடையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இரு கட்டடங்களும் விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (கே)

# குடிநீருக்காக ஏக்கம்

(வல்லை)

அச்சுவேலி வல்லைப் பகுதி மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பல சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

நிலாவரை கிணற்றிலிருந்து தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையினால் வழங்கப்படும் நீர் போதாமையாக உள்ளதுடன் நேர அளவும் குறைவாக காணப்படுகின்றது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

200 குடும்பங்களுக்கு மேல் நீரைப் பெறும் இப்பகுதியில் 6 தொட்டிகளுக்கு மேல் பாவனைக்கு கட்டப்பட்டும் 2 தொட்டிகளுக்கு மாத்திரமே நீர் வருவதாகவும் காலை மட்டும் விநியோகிக்கப்படுவதுடன் மாலை நேரங்களில் நீர் விநியோகிக்கப் படுவதில்லை என குற்றம் சாட்டப்படுவதுடன் நல்ல குடிநீரை பெற வல்லைச் சந்தியில் உள்ள இராணுவக் காவலரணில் காணப்படும் குடிநீர்த் தாங்கியிலேயே தாம் பெற வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். (15)

# நட்டாங்கண்டல் வீதிக்கு விமோசனம் கிடைப்பது எப்போது?

(பாண்டியன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நட்டாங்கண்டல் கிராமத்திற்கு செல்லும் பிரதான வீதி சீரழிந்தமையால் பயணிகள் உட்பட நோயாளர்கள் எனப் பலரும் இடர்களை சந்தித்து வருகின்றனர்.

மேற்படி மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் S-R சந்தியில் இருந்து நட்டாங்கண்டல் பிரதேசத்திற்கு செல்லும் பிரதான வீதியின் சுமார் 3 கிலோமீற்றர் தூரம் நீண்டகாலமாக திருத்தப்படாமல் சீரழிந்தமையால் இதனூடான போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் நட்டாங்கண்டல் கிராமத்தில் அமைந்த மகப்பேற்று மருத்துவமனையில் நோயாளர்களை ஏற்றி இதே வீதியால் அம்புலன்ஸ் மூலம் மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு அவசரமாக எடுத்துவரும் போது அந்த காவு வண்டி புதைந்ததாக



அறியமுடிகின்றது.

இதன்போது பொதுமக்கள் ஒன்றிணைந்து அம்புலன்ஸ் வண்டியை நீண்ட போராட்டத்திற்கு மத்தியில் மீட்டு உடன் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர். மேற்குறித்த வீதியானது நீண்டகாலம் திருத்தப்படாத நிலையில் இருப்பதனால் இவ்வீதியினைத் திருத்தித் தருமாறு மக்கள் கேட்டுக்கொண்டனர். (140)

# விபத்தில் சிக்கியது பயணிகள் பேருந்து



யாழ். நகரிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த தனியார் பயணிகள் பேருந்து ஒன்று நேற்று பிற்பகல் பஸ்தியன் சந்தி பகுதியில் விபத்தில் சிக்கியதில் சில பயணிகள் சிறுகாயங்களுக்குள்ளாகியதுடன் பஸ் வண்டியின் முன்பகுதி கடுமையாகச் சேதமடைந்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். நகரிலிருந்து புறப்பட்ட குறித்த பயணிகள் பேருந்து பஸ்தியன் சந்தி பகுதியைக் கடந்த போது பிரதான வீதியின் வளைந்த பகுதியில் சாரதியின் கட்டுப்பாட்டை மீறிய பஸ்வண்டி அருகே இருந்த வீடு ஒன்றின் மதில் சுவரை இடித்து தரைமட்டமாக்கி உள்ளே புகுந்தது.

இந்த விபத்தின்போது முன் பக்கமாக இருந்த பயணிகள் சிலர் சிறு காயங்களுக்குள்ளாகியதுடன் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

சம்பவ இடத்தில் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர். விபத்தை அடுத்து பயணிகள் பஸ்சில் இருந்து இறக்கப்பட்டு மாற்று போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகின்றது. (பா,20)

# பட்டப்பகலில் கொள்ளை; சாவகச்சேரியில் கைவரிசை

நுணாவில் - கல்வயல் வீதியில் உள்ள வீடு ஒன்றில் பட்டப்பகலில் ஓடு பிரித்து துணிகர கொள்ளைச் சம்பவம் ஒன்று கடந்தவாரம் இடம்பெற்றுள்ளது.

கந்தையா அருளுணாசா என்பவரது வீட்டிலேயே இவ்வாறு துணிகரமாக கொள்ளை இடம்பெற்றுள்ளது.

இவர் தனது கடைக்கு சென்றிருந்த வேளை நண்பகல் உணவினை எடுத்துச்சென்ற அவரது மனைவி மீண்டும் வீடு திரும்பிய வேளையில் வீட்டில் கொள்ளையிடப்பட்டுள்ளமையை கண்டுள்ளார்.

நண்பகல் வேளையில் இவர்களின் வீட்டில் யாரும் இருக்கவில்லை. இதை நீண்ட நாட்களாக அவதானித்தவர்களே இக்கொள்ளைச் சம்பவத்தை மேற்கொண்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டு அலுமாரியில் இருந்த பெறுமதியான உடுபுடவைகள் மற்றும் கையடக்கத் தொலைபேசி, போட்டோ கமரா எனப் பல பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் பற்றி சாவகச்சேரி பொலிஸில் முறையிட்டதையடுத்து பொலிஸ் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கைரேகை நிபுணர்கள் சகிதம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டிருந்தனர். (இ)





யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் காலஞ்சென்ற வணக்கத்துக்குரிய ஹரோல்ட் புள்ளேயின் உருவப்படத்தை அவுஸ்ரேலியாவிலிருந்து வருகைதந்த பொறியியலாளர் சற்குணநாதன் திரைநீக்கம் செய்துவைத்து உரையாற்றுவதையும் நிகழ்வில் கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர் மற்றும் பழைய மாணவர்கள் அமர்ந்திருப்பதனையும் காணலாம். (படம் - பார்த்திபன்)

# மதிப்பீட்டுப் பணிக்கு அதிக கொடுப்பனவு; ஏமாற்றமடைந்தனர் ஆசிரியர்கள்

(அச்சுவேலி)

நடைபெற்று முடிந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் கொடுப்பனவுகள் இம்முறை அதிகரிக்கப்படும் என விடைத்தாள் மதிப்பீட்டு நிலையங்களுக்கு மேற்பார்வை செய்யவந்த பரீட்சைத் திணைக்கள அதிகாரியினால் ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், மதிப்பீட்டின் இறுதி நாள் வரை கொடுப்பனவு அதிகரிப்புப் பற்றி எந்தவொரு தகவலும் கிடைக்கப் பெறாமையினால் முன்னைய கொடுப்பனவு விபரங்களுக்கமையவே வவுச்சர்கள் முடிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்முறை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களின் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும் என பல தரப்பினராலும் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டிருந்த நிலையிலும் அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமையானது தமக்கு மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஆசிரியர்கள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையின் முதலாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் யாவும் கடந்த 08 ஆம திகதியுடன் செவ்வாய்க் கிழமையுடன் நிறைவடைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (03)

# யாழில் 1053 சிறுவர்கள் தமது தாயை இழந்துள்ளனர்

## – புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தாயை இழந்த சிறுவர்களின் எண்ணிக்கை 2011ஆம் ஆண்டை விட 2012ஆண்டு குறைவடைந்துள்ளதாக யாழ். மாவட்டச் செயலக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி யாழ்.மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவுகள் உள்ளடங்கலாக 2011ஆம் ஆ ண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதி வரை 1812 சிறுவர்கள் தாயை இழந்துள்ளமை இனங்காணப்பட்டுள்ள நிலையில் இவ் எண்ணிக்கை 2012 ஆண்டு 1053 ஆக குறைவடைந்துள்ளதாக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவித்துள்ளன. நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 27 சிறுவர்களும் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 56 சிறுவர்களும், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் 20 சிறுவர்களும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 38 சிறுவர்களும் யாழ். பிரதேச செயலர் பிரிவில் 56 பேரும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 50 சிறுவர்களும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 145 சிறுவர்களும் தாயை இழந்துள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

மேலும் சங்கானைப்பிரதேச செயலர் பிரிவில் 73 சிறுவர்களும், உடுவில் பிரதேச பிரிவில் 13 சிறுவர்களும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 67 சிறுவர்களும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 121 சிறுவர்களும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 109 சிறுவர்களும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 120 சிறுவர்களும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 113 சிறுவர்களும், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 45 சிறுவர்களும் தாயை இழந்துள்ளமை இனங்காணப்பட்டுள்ளதாக மாவட்ட செயலக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (பா)

# நூறாவது பாடசாலை கிருஷ்ணபுரத்தில் ஆரம்பம்

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிபிரதேச செயலர் பிரிவிலுள்ள கிருஷ்ணபுரத்தில் மிக அண்மையில் நூறாவது பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டது. பளை மத்திய கல்லூரியும் ஆரம்பப் பிரிவு தனியாகப் பிரிக்கப்பட்டு நூற்றியோராவது பாடசாலையாக பளை மத்திய ஆரம்பப் பாடசாலை என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ளது.

பெரிய பரந்தனிலுள்ள தாரணி குடியிருப்பு பொது மக்கள் அது போல தமக்கும் தனியாக ஆரம்பப் பாடசாலையொன்று உருவாக்கித் தரப்படல் வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப் பிரதேச மாணவர்கள் மிக நீண்ட தூரம் நடந்து சென்றே பாடசாலை செல்ல வேண்டியுள்ளது. இது தொடர்பான விரைவான நடவடிக்கையை கிளிநொச்சி வலயக் கல்வித்திணைக்களம் எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (90)

# மன்னார் அன்னை திரேசா வீதிக்கு 18 வருடங்களாக மின்சாரமில்லை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கீரி கிராமத்திலுள்ள அன்னை திரேசா வீதிக்கு இதுவரை மின்சார வசதிகள் வழங்கப்படாமையால் அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்வதில் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக இக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் இருந்துவருகை தந்து மேற்படி கிராமத்தில் மீள்குடியேறி 18 வருடங்கள் கழிந்துள்ள போதிலும் இதுவரை மேற்படி வீதிக்கு மின்சாரம் வழங்கப்படாமையால் பாடசாலை மாணவர்கள் கல்வி கற்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதைவிட மன்னாரில் பல பின்தங்கிய பிரதேசங்களுக்கு மின்சார வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், இக்கிராம வீதிக்கு மட்டும் ஏன் இதுவரை வழங்கப்படவில்லை என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனினும் இக்கிராம.வீதிக்கு மின்சார விநியோகத்தை வழங்குமாறு கிராம சேவையாளர் பிரதேச செயலர் ஆகியோருக்கு பலமுறை தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே இக்கிராமத்தில் கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் மாணவர்களின் நலன் கருதி வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழாவது மின்சார விநியோகத்தைப் பெற்றுத்தர உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு இக் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# யாழ். சட்டத்தரணிகள் ஆதரவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மேல் நீதிமன்ற சட்டத் தரணிகள் பணிப்புறக் கணிப்பினை மேற்கொள்ளவில்லை என யாழ். மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்க செயலாளர் மு.ரெமீடியஸ் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பணிப்புறக்கணிப்பினை மேற்கொள்ள தீர்மானித்தால் தாமும் ஒத்துழைப்பு வழங்குவோமென்றும் இதுவரையில் பணிப்புறக்கணிப்பினை மேற் கொள்ள தீர்மானிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, மக்களின் தேவைகளையும், அசௌகரியங்களையும் தீர்க்கும் முகமாக பணிப்புறக்கணிப்பினை மேற்கொள்ளவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (25)

# வைத்திய நிலையங்களில் கால்நடைகளுக்கு சிகிச்சை

(பருத்தித்துறை)

பசு மாடுகள் தவிர்ந்த ஏனைய கால்நடைகள், விலங்குகளுக்கு சிகிச்சை அளிக்க வேண்டுமாயின் அவற்றை நேரடியாக வைத்திய நிலையத்திற்கு கொண்டுவருமாறு கால்நடை, மற்றும் விலங்குகளை வளர்ப்போருக்கு பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையம் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

பசுமாடுகளுக்கு மாத்திரமே குறிப்பிட்ட இடங்களுக்கு சென்று சிகிச்சை வழங்கக்கூடியதாக இருக்கும். எனவே ஏனைய கால்நடைகள் மற்றும் விலங்குகளை வளர்ப்போர் போதிய ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் பிரதி ஒன்றுவிட்ட வியாழக்கிழமைகளில் கோழிகளுக்கான அம்மை நோய்த் தடுப்பூசி மருந்து கோழிகளுக்கு ஏற்றப்பட்டு வருகின்றன.

இவ்வைத்திய நிலைய எல்லைக்குள் வதியும் கோழி வளர்ப்பாளர்கள், கோழிப் பண்ணையாளர்கள் கோழிகளுக்கு அம்மை நோய்த் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையம் கோரியுள்ளது. (109)

# கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் உள்ளகப்பயிற்சி 2013ஆம் ஆண்டு மாணவர்களுக்கான கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறவிருப்பதாகவும் மாணவர்களை இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்லூரி பீடாதிபதி எஸ். கே. யோகநாதன் அறிவித்துள்ளார்.

# கண்டாவளை மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்

(பருத்தித்துறை)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தால் படுமோசமாகப் பாதிக்கப்பட்ட நாதன் குடியிருப்பைச் சேர்ந்த ஐம்பத்தெட்டு குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம் ஆகியவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளனர்.

நாதன் குடியிருப்பைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூலமாக சுமார் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான பாலுணவுகள் உலர் உணவுப் பொருட்கள் மற்றும் குடிதண்ணீர்ப் போத்தல்கள் என்பன வழங்கப்பட்டன.

பருத்தித்துறை நீதிமன்றத்தின் சார்பில் மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் சி.இராஜேஸ்வரன் நீதவான் நீதிமன்ற பிரதம எழுதுவினைஞர் வ.தர்மகுலசிங்கம் ஆகியோரும், உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் நேரடியாகச் சென்று பொருட்களை வழங்கினர். (109)



ஹற்றன் நஷனல் வங்கியின் 245 ஆவது கிளை அண்மையில் மல்லாவியில் திறந்து வைக்கப்பட்ட போது பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட வங்கியின் பிரதி பொது முகாமையாளர் திருமதி எல்.சி.சி.தம்பையா, பிரதேச செயலர்கள், கிளை உத்தியோகத்தர்கள் அழைத்து வரப்படுவதையும், கனகராயன் குளம் பகுதி பொலிஸ் அத்தியட்சகர் மங்கள விளக்கேற்றுவதையும், திறந்து வைக்கப்பட்ட வங்கிக் கட்டடத்தையும் காணலாம். (140)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## அதிகம் சாப்பிட்டால் ஞாபகம் குறையும்

நாளுக்கொரு ஆய்வு முடிவினை வெளியிட்டபடி இருக்கிறார்கள். எதை எடுப்பது எதை விடுவது, இவையெல்லாம் உண்மையிலேயே ஆய்வுபூர்வமான சரியான முடிவுகள்தானா என்றெல்லாம் நாம் குழம்ப வேண்டியிருக்கிறது. உடம்பை முன்னம் இழுக்கென்றிருந்தேன் உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன் என்ற திருமூலர் அறிவாக, உயிர் வளர்க்கவும் உடம்பைக் கவனிக்க வேண்டியிருக்கிறது.

உடலை நாம் எப்படிக் கவனிக்கிறோம். நல்லாய்ச் சாப்பிடு என்று சொல்லாத தாய் யாருமில்லை. ஒருவரை அதிகம் சாப்பிட வைப்பதுதான் தெம்பும் அன்பும் என்றே நாம் நினைக்கிறோம். அதிகம் சாப்பிட்டால் தொப்பை போடுவது மட்டுமல்ல, ஞாபக சக்தியும் குறையும் என்று சமீபத்திய ஆய்வு ஒன்று சொல்கிறது.

சாப்பாட்டை ஒரு வெட்டு வெட்டுபவர்களுக்கு இது கசப்பான தகவல் தான். அதிகம் சாப்பிடுவது பல்வேறு நோய்களுக்கு வழி வகுக்கும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். குறிப்பாக அதிகம் சாப்பிடுபவர்களுக்கு ஞாபக சக்தி குறையுமாம். அதிகம் சாப்பிடுபவர்களுக்கு மந்த புத்தி என்று சொல்வதை கேள்விப்பட்டிருக்கிறோம். அது உண்மை தான் என்கிறது, இந்த ஆய்வு.

இந்த ஆராய்ச்சியில் பங்கேற்றவர்கள் 3 வகையாக பிரிக்கப்பட்டார்கள். 600 முதல் 1526 கலோரிகள், 1526 முதல் 2143 கலோரிகள், 2143 முதல் 6000 கலோரிகள் உணவு உட்கொள்பவர்கள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த 3 பிரிவினரிடமும் ஒரு வினா–விடை படிவம் கொடுக்கப்பட்டது. இதில் முதல் வகையைச் சேர்ந்தவர்கள் ஓரளவுக்கு விடைகளை தெளிவாக குறிப்பிட்டுள்ளனர். 2வது வகையினர் அதை விட சற்று குறைவான பதிலையே கொடுத்துள்ளனர். 3வது வகையினர் மிக மிகக்குறைவான கேள்விகளுக்கே பதில் கூறியுள்ளனர். அதனால் அவர்களுக்கு ஞாபக சக்தி குறைவு ஏற்பட்டுள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.

அதிகம் சாப்பிடுபவர்களுக்கு அதிக இரத்த அழுத்தம் நீரிழிவு நோய், மாரடைப்பு போன்ற பல்வேறு நோய்கள் ஏற்படலாம். இந்த வரிசையில் ஞாபக சக்தி குறைவு, மனச்சிதைவு போன்ற நோய்களும் ஏற்படும் என்று இந்தப் புதிய ஆய்வு சொல்கிறது. வயிறு முட்ட சாப்பிடக் கூடாது. ஒரு நாளைக்கு எத்தனை முறை என்பது கணக்கல்ல. அளவுக்கு அதிகமாக சாப்பிடக் கூடாது என்பது தான் முக்கியம்.

நாற்பது வயதுக்கு மேல் ஆகி விட்டால் அதிகமான உணவு உட்கொள்வதை தவிர்த்து உணவு சாப்பிடும் வேளைகளை வேண்டுமானால் கூட்டிக் கொள்ளலாம் என்று மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள். அளவான உணவை ஒருநாளில் 5 முறைகள் சாப்பிட்டால் நல்லது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

உடல் பருமனாகிறதே என்ற கவலையில் உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது; இப்போது ஞாபக சக்திக்காகவும் சாப்பாட்டைக் குறைத்துக்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. நம் செயற்பாடுகள், பழக்கங்களில் மாறுதல்கள் தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன. இயந்திரங்கள் தொழில்நுட்பங்களின் வருகையோடு நம் உடலுழைப்பின் தேவையும் குறைந்து வருகிறது. உடலுழைப்புக் குறையும் போது நம் உணவுப் பழக்கத்திலும் மாறுதல்களைக் கொண்டுவர வேண்டியுள்ளது.

இனிமேல், உபசரிப்பு என்பது விதவிதமாகச் சமைத்து சாப்பிடுங்கள் சாப்பிடுங்கள் என்று மூக்குமுட்டப் பரிமாறுவது அல்ல. குறைவாகச் சாப்பிடச் சொல்லி வற்புறுத்துவதும் அளவோடு கொடுப்பதுமே சிறந்த உபசரிப்பாகக் கூடும். - ஆசிரியர்

# வீதிகளில் பதுங்குகுழி அமைத்து போராட வேண்டிய நிலை

## என்கிறார் விக்கிரமபாகு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தோள் மீதேறிக் கொண்டுள்ளவர்கள் நாடாளுமன்றத்தை ஓர் பதுங்கு குழியாக்கியுள்ளனர். இந்த அரசாங்கம், நாடாளுமன்றத்துக்குள் பதுங்கு குழிகளை அமைத்தால் நாம் வீதிகளில் பதுங்கு குழிகளை அமைத்து இந்த அரசாங்கத்துக்கு எதிராகப் போராடுவோம் என்று புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார். கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப்பிரேரணை தொடர்பில் விசாரணை நடத்திய நாடாளுமன்றத் தெரிவுக்குழு விடுத்த அறிக்கை முழுமையற்றது. அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாமலேயே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை செல்லுபடியற்றது என நீதிமன்றமும் தீர்ப்பளித்து விட்டது. இந்நிலையில், நீதிமன்றத்தின் தீர்ப்பினை ஏற்க முடியாது என நாடாளுமன்றம் கூற முடியாது.

சட்டத்தை மாற்றுவதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உண்டு. இருப்பினும் பிடிவாதத்துடன் செயற்பட முடியாது. இவ்வாறானதொரு நிலையில், இந்த விவகாரம் தொடர்பிலான சபாநாயகரின் கருத்து என்ன என்பதே எமது கேள்வியாகும்.

நாடாளுமன்றம் தனது பொறுப்பில் இருந்து மீறிச் செயற்படுகின்றது. ஜனாதிபதியின் தோள் மீது ஏறிக்கொண்டு நாடாளுமன்றத்தில் பதுங்கு குழிகளை அமைத்து வருகின்றனர். அவர்கள் நாடாளுமன்றத்துக்குள் பதுங்கு குழிகளை அமைத்தால், நாம் வீதிகளில் பதுங்கு குழிகளை அமைக்க நேரிடும்.

அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் சர்வதேசத்தின் முன் பாசாங்கு காட்டி வரும் இந்த அரசாங்கம் உள்நாட்டுக்குள் சதி செய்கின்றது. இந்தச் சதிக்கு பிரதம நீதியரசரை பலிக்கடாவாக்குகின்றது. நீதியரசர் விவகாரத்தில் நாடாளுமன்றத்தில் பலவந்தமானதொரு விவாதம் இடம்பெறுமாயின் நாம் இந்த அரசாங்கத்துக்கு எதிராகப் பாரிய போராட்டத்தை முன்னெடுப்போம்.

நீதிமன்றத்தில் தோல்வியுற்றவர்கள் அரச வீட்டின் அனுமதியுடன் நாடகம் போட்டு வருகிறார்கள். கோல்டன் கீ ஊழல் மோசடிக்கு இந்த அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும். ஆனால், பிரதம நீதியரசரின் வீட்டுக்கு முன்னால் அமர்ந்து கொண்டு நாடகம் போடுகிறார்கள் என்றார்.

# நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசு காணிப் பிரச்சினைக்கு முன்னுரிமை

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளில் வடக்கின் காணிப் பிரச்சினைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக காணி உரிமையாளர்களிடம் காணியை வழங்கும் வேலை தொடங்கிவிட்டது. காணிப் பிரச்சினைகளில் அனேகமானவை இந்த வருடத்திற்குள் தீர்ந்துவிடும் என நம்புகின்றேன் என அவர் குறிப்பிட்டார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளுக்கு அமைய வட மாகாணத்தில் புனர்வாழ்வு, மீள்கட்டுமானம், நல்லிணக்கம் ஆகியன சுமுகமாக நடைபெறுகின்றது என இந்த தேசிய வேலைத்திட்டத்தின் பிரதித் தலைவரான மொஹான் பீரிஸ் தெரிவித்தார்.

இதற்காக சுமார் 100 மில்லியன் ரூபா வரவு - செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன இதனை துரிதப்படுத்துவதற்காக இதுவரை 10 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை முக்கியப்படுத்தி நாட்டிலுள்ள காணிப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென பிரச்சினைக்குரிய காணிகள் பற்றிய ஜனாதிபதியின் விசேட செயலணி நான்காவது காணி ஆணைக்குழு அமைக்கவுள்ளது என மொஹான் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் நகரில் கழிவுகள் தேக்கம் கழிவகற்றும் பொறிமுறை முடக்கம்

மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கழிவுகளை அகற்றி கொட்டுவதற்கு இடப் பற்றாக்குறை காணப்படுவதாகவும் இதனால் நகர சபையினால் கழிவுகளை துரிதகதியில் அகற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மன்னார் நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்தும் பெய்து வந்த கடும் மழையின் காரணமாக மன்னார் நகர சபையின் சுத்திகரிப்பு பணியாளர்களினால் கழிவுகளை அகற்ற முடியாத நிலை காணப்பட்டதோடு தாமதமும் ஏற்பட்டிருந்தது.

கடந்த காலங்களில் மன்னார் நகர சபையினால் சேகரிக்கப்பட்ட கழிவுகள் தனியார் ஒருவருடைய காணியில் தாழ்வான பகுதியில் கொட்டப்பட்டு மண் அகழப்பட்டு வந்தது.

தற்போது குறித்த தனியார் காணியில் மண் அகழ்வுக்கு மன்னார் பிரதேசச் செயலரினால் அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் குறித்த காணியில் கழிவுகளைக் கொட்ட தற்போது அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் நகரசபையின் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம், உப தலைவர் ஜேம்ஸ் உட்பட நகரசபை உறுப்பினர்கள், மன்னார் மாவட்ட அரசங்க அதிபர் சரத் ரவீந்திர, மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல் ஆகியோருடன் குறித்த பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் மன்னார் பிரதேசச் செயலரின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில் கழிவுகளை சேகரிப்பதற்காக 5 ஏக்கர் அரச காணி மன்னார் நகர சபைக்கு வழங்குவதாக மன்னார் பிரதேச செயலர் தெரிவித்திருந்தார்.

ஆனால் இது வரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. சுத்திகரிப்பு பணியாளர்கள் அகழ்கின்ற கழிவுகளை வீதிகளிலும் வேறு இடங்களிலும் கொட்டியுள்ளனர்.

தற்போது மழை பெய்து கொண்டிருப்பதினால் மக்கள் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே அரச அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு உடனடியாக குப்பைகளை கொட்டுவதற்கான இடம் ஒன்றை ஒதுக்கித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுத்திகரிப்புப் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

எனவே சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட விரும்புவோர் மன்னார் நகரசபையுடன் தொடர்பை மேற்கொள்ளுமாறு நகரசபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் மேலும் தெரிவித்தார்.

# போலி வைத்தியர்கள் பற்றி பொலிஸ்மா அதிபருக்கு தகவல்

நாட்டில் செயற்பட்டு வரும் போலி வைத்தியர்கள் குறித்த தகவல்களை பொலிஸ் மா அதிபருக்கு வழங்க அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இது குறித்து பேச்சுவார்த்தை இடம்பெறும் என சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் நவின் டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் 40,000 போலி வைத்தியர்கள் செயற்பட்டு வருவதாகவும் இதனால் நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

போலி வைத்தியர்களைத் தண்டிக்கவென காணப்படும் சட்ட ஏற்பாடுகள் குறைவு என்பதால் இது குறித்து பொலிஸ் மா அதிபருக்கு தெளிவுபடுத்தவுள்ளதாக சங்கம் கூறியுள்ளது.

போலி வைத்தியர்களை குறைந்தது ஐந்து வருடங்களாவது சிறை வைக்க வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 18

வே. அர்ச்சுணன்

**தமிழ்ச்செல்வன் பிரபாகரனிடம் நேரில் இந்த விடயம் தொடர்பாகக் கூறியபோது கடும் ஆத்திரம் அடைந்த பிரபாகரன், ஏற்கனவே இயக்கத்தை விற்கின்ற நடவடிக்கையில் குறித்த பத்திரிகை ஈடுபட்டு வருகின்றது. இந்த நிலையில் அவர்களுக்கு வானொலியையும், இயக்குவதற்கு அனுமதி அளித்து விட்டால் ஒட்டு மொத்த இயக்கத்தையுமே அந்த வித்தியாசமான ஊடகவியலாளர் விற்றுவிடுவார் என்று தமிழ்ச் செல்வனிடம் கோபத்தோடு கூறினார். மேலும், இந்த விடயம் தொடர்பில் நீங்கள் என்னுடன் இனிமேல் கதைக்கக் கூடாது. பொட்டம்மானுடன் கதைத்து அவர் அனுமதியை பெறுமாறு பாலா அங்கிளிடம் கூறுங்கள் எனவும் பிரபாகரன் மிகக் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.**

விடுதலைப் புலிகளிடம் அளிக்கப்பட்ட உறுதிமொழிக்கு அமைவாக விடுதலைப் புலிகளின் தேவைப்பட்டியல் உள்ளடங்கிய பட்டியலுடன் நோர்வேக் குழுவினர் உடனடியாகவே தென்பகுதிக்கு விசேட உலங்குவானூர்தியில் விரைந்து சென்றனர். இவ்வாறு சென்ற நோர்வேக் குழுவினர் அரசமட்டத்தில் பேச்சுவார்த்தைக் குழுவின் முக்கிய பிரமுகர்களுடன் சந்திப்பில் ஈடுபட்டனர். இவ்வாறு அரச தரப்பிற்கும் நோர்வேக் குழுவினரிற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் விடுதலைப் புலிகள் கோரியுள்ள விபரப் பட்டியலில் அடங்கியுள்ள பொருட்களை வழங்குவது எதிர்காலத்தில் ஆபத்தை ஏற்படுத்தலாம் என அரச தரப்பில் நோர்வே குழுவிடம் விளக்கம் அளிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்ட நோர்வே குழுவினர், இருந்த போதிலும் சமாதான முயற்சிகளில் இருதரப்பும் சில விட்டுக் கொடுப்புகளை செய்தால் தான் பேச்சுவார்த்தையை முன்னோக்கி நகர்த்த முடியும். நீங்கள் இதற்கு உடன்பட மறுத்தால் இதனையே ஒரு சாட்டாக வைத்துக்கொண்டு புலிகள் பேச்சுவார்த்தையில் இருந்து விலகிவிடுவார்கள். எனவே இராஜதந்திர ரீதியாக அரசாங்கம் இவ்விடயத்தை அணுகவேண்டும். நீங்கள் இதற்கு உடன்படுவீர்களானால் புலிகள் ஏதோ ஒரு கட்டத்தில் முரண்டு பிடித்தால் அரசாங்கம் சில விட்டுக் கொடுப்புகளை ஏற்கனவே செய்துள்ளது இவ்வாறு நீங்களும் செய்ய வேண்டும் என புலிகளிடம் நாங்கள் அழுத்தமாக கூறமுடியும். இதைவிட புலிகள் கோரியுள்ள தொடர்பு சாதனத்தை நோர்வே வழங்குகின்ற போதிலும், அதனை பயங்கரவாதத்திற்கு துணைபோகின்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு நோர்வே அரசாங்கம் ஒருபோதுமே அனுமதிக்காது. இவ்விடயத்தில் புலிகளும் எங்களுடன் உடன்பாட்டை எட்டியுள்ளார்கள். எனவே நீங்கள் கலக்கமடையாமல் அல்லது தயக்கமடையாமல் நாங்கள் உதவுவதற்கு அனுமதிக்க வேண்டுமென இலங்கை அரசிடம் நோர்வே குழுவினர் கேட்டுக்கொண்டனர்.



இதனை அடுத்து புலிகளிற்கு நவீன வானொலி உபகரணங்கள் தொடர்பு சாதனங்கள் என்பன வன்னிப் பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு அரச தரப்பினரும் அனுமதி வழங்கினர். அதைத் தொடர்ந்து வலுமிகுந்த வானொலிக் கருவிகள் நோர்வேயால் எடுத்துச் செல்லப்பட்டு வன்னியில் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டன. விடுதலைப் புலிகள் இந்தக் கருவிகளை பெற்றதுடன் திருப்தியடையவில்லை. இதைவிட வலுவான வானொலி கருவிகளையும், தொடர்பாடல் சாதனங்களையும் வன்னிப் பகுதிக்கு எடுத்துவரவேண்டும் என்பதில் குறியாக இருந்தனர். இதற்கென பதுமன் என்ற போராளியை விடுதலைப் புலிகள் வெளிநாட்டு சுற்றுலாவிற்கென அனுப்புவது போன்று முடிவெடுத்தனர். இவரது மேற்பார்வையில் ஒவ்வொரு நாடுகளிலுமுள்ள தொலைத் தொடர்பு சாதனங்களின் வானொலி செயற்பாடுகளின் நுணுக்கங்கள் பற்றி ஆராய்கின்ற பொறிமுறை ஒன்றை வகுக்கும் நோக்குடன் புலிகளால் விரிவான திட்டம் வகுக்கப்பட்ட போதிலும் இத்திட்டம் இடையில் பிசுபிசுத்துப் போன காரணத்தால் கடைசி வரைக்கும் நிறைவு பெறவில்லை.

விடுதலைப் புலிகள் தங்களது வானொலிக்குரிய உபகரணங்களை கொள்வனவு செய்தது போன்று தங்களது பத்திரிகைக்கும் நவீன ஓவ்செற் மெசின் ஒன்றை சிங்கப்பூரில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்வதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தனர். இத்திட்டமும் கைகூடாமல், இறுதியில் ஜேர்மனியில் இருந்து ஒரு ஓவ்செற் மெசின் இறக்குமதி செய்யப்பட்டு வன்னிப் பகுதிக்கு எடுத்து வரப்பட்டது. இந்த மெசினைக் கொண்டுவருகையில், ஓமந்தையில் படையினர் தடை விதித்த போதும் நோர்வேயின் அனுசரணையுடன் அது தடையின்றிக் கொண்டுவரப்பட்டது. இந்த ஓவ்செற் மெசின் ஈழநாதம் பத்திரிகைக்கெனவே எடுத்துவரப்பட்ட போதிலும், ஈழநாதத்திற்கு அது வழங்கப்படாமல் நேரடியாக புதுக்குடியிருப்பில் இருந்த பிரபாகரனின் தனிப்பட்ட பிரத்தியேக அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு வைத்து புலிகளின் பிரச்சார சுவரொட்டிகள் அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

இதே வேளை புலிகளின் தேவைப் பட்டியல் நோர்வேயிடம் கையளிக்கப்பட்ட விடயத்தை அன்ரன் பாலசிங்கத்தின் ஊடாக யாழிலுள்ள வித்தியாசமான பத்திரிகையின் வித்தியாசமான ஆசிரியரும் அறிந்துகொண்டார். இதனை அடுத்து அவரிற்கு தோன்றிய நப்பாசையின் வெளிப்பாடாக யாழ்ப்பாணத்தில் ஒரு வானொலியை இயங்க வைப்பதற்கும் அதற்குரிய உதவிகளையும், அனுமதியையும் புலிகளிடம் பெறுவதற்கும் அனுமதி கோரியிருந்தார். இவரின் கோரிக்கையை தான் தலைவரிடம் எடுத்து விளக்குவதாகவும் எப்படியும் அனுமதியை பெற்றுத் தருவேன் எனவும், அன்ரன் பாலசிங்கம் யாழ்ப்பாணத்தில் முன்னணி பத்திரிகை என்று கூறும் பத்திரிகையின் வித்தியாசமான ஆசிரியரிடம் உறுதியளிதிருந்தார்.

இவ்விடயம் தமிழ்ச் செல்வனிடம் கூறப்பட்ட போது தலைவர் இதற்கு ஒருபோதும் உடன்பட மாட்டார். சில வேளைகளில் தலைவர் உடன்பட்டாலும் பொட்டம்மான், ஒரு போதுமே தலைவரை உடன்படுவதற்கு விடமாட்டார். எனவே இவ்விடயம் தொடர்பில் கதைப்பதில் பிரயோசனம் இருக்கப் போவதில்லை என எடுத்துக் கூறினார். தமிழ்ச் செல்வனிற்கும் அன்ரன் பாலசிங்கத்திற்கும் இடையில் நடந்த தொலைபேசி உரையாடலிலேயே தமிழ்ச்செல்வன் இதனைச் சொன்னார். எனினும் இதனை ஏற்றுக்கொள்ளாத அன்ரன் பாலசிங்கம் நீர் கதையும் நான் தலைவருடன் கதைத்து உடன்பட வைப்பேன். இன்னுமொரு வானொலி எங்களிற்கு சார்பாக யாழ்ப்பாணத்திலிருந்து வருவது நல்லது தானே, ஐசே நீர் ஏன் பயப்படுகிறீர்? நீர் கதையும் தலைவருடன் நானும் கதைப்பேன் என்று கூறிவிட்டு தொடர்பை பாலசிங்கம் துண்டித்து விட்டார்.

இதன்பின் தமிழ்ச்செல்வன் பிரபாகரனிடம் நேரில் இந்த விடயம் தொடர்பாகக் கூறியபோது கடும் ஆத்திரம் அடைந்த பிரபாகரன், ஏற்கனவே இயக்கத்தை விற்கின்ற நடவடிக்கையில் குறித்த பத்திரிகை ஈடுபட்டு வருகின்றது. இந்த நிலையில் அவர்களுக்கு வானொலியையும், இயக்குவதற்கு அனுமதி அளித்து விட்டால் ஒட்டு மொத்த இயக்கத்தையுமே அந்த வித்தியாசமான ஊடகவியலாளர் விற்றுவிடுவார் என்று தமிழ்ச் செல்வனிடம் கோபத்தோடு கூறினார். மேலும், இந்த விடயம் தொடர்பில் நீங்கள் என்னுடன் இனிமேல் கதைக்கக் கூடாது. பொட்டம்மானுடன் கதைத்து அவர் அனுமதியை பெறுமாறு பாலா அங்கிளிடம் கூறுங்கள் எனவும் பிரபாகரன் மிகக் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

இந்த விடயத்தை தமிழ்ச் செல்வன் பாலசிங்கத்திற்கு கூறியதை அடுத்து முதலில் கடுப்படைந்த பாலசிங்கம் பின்னர் தமிழ்ச்செல்வன் கூறியதை ஏற்றுக்கொண்டார். இதேவேளை புலிகளுக்கு நோர்வேயிடமிருந்து வானொலிக்காக கிடைத்திருந்த நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட வானொலிச் சேவை ஆரம்பிக்கப்பட்டபோது இச்சேவை வன்னி உட்பட தமிழ்நாடு வரையும் விஸ்தரிப்புப் பெற்றது. இந்த விஸ்தரிப்பானது விடுதலைப் புலிகளை அழிக்கும் செயற்பாட்டில் எந்தளவு தூரம் பங்கு வகித்தது? தமிழ் ஊடகங்கள் விடுதலைப் புலிகளை அழித்தமை எவ்வாறு என்பது தொடர்பில் தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

# நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம்

# இதுவரையில் தகவல்கள் எதுவும் இல்லை

## அரசாங்கம் கவலை



(கொழும்பு)

யுத்தத்தின் பின்னரான நிலைமையை மதிப்பிட இலங்கைக்கு வருமாறு அரசாங்கம் விடுத்த அழைப்பை இன்னும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஏற்றுக்கொள்ளவில்லை என்று அரசாங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அரசாங்கத்தின் சார்பில் கவலை வெளியிட்டுள்ளார்.

நவநீதம்பிள்ளைக்கு 11 மாதங்களுக்கு முன்னர் அரசாங்கத்தினால் இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப் பட்டது. இலங்கைக்கு வருவதற் காக அவர் விதித்த நிபந்தனை கள் நிறைவேற்றப்பட்ட போதி லும் அவரின் விஜயத்துக் கான திகதி அறிவிக்கப்பட வில்லை

நவநீதம்பிள்ளை, தனது வருகைக்கு முன்னோடியாக விதித்த நிபந்தனைகள் இரண்டும் நிறைவேற்றப்பட்டுவிட்ட போதிலும் அவர் தனது வருகை குறித்து இன்னும் பதிலளிக்கவில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கடந்த வருடம் மார்ச் மாதம் எடுக்கப்படுவதற்கு முன்னர், நாம் ஓர் அழைப்பை அவருக்கு விடுத்திருந்தோம்.

இருப்பினும், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகி, தனது அலுவலக அணியினரின் முதற்கட்ட விஜயம் இடம்பெற்ற பின்னர் தான் இலங்கை வந்தால் போதும் என நவநீதம்பிள்ளை கூறியிருந்தார் என ஜீ.எல்.பீரிஸ் கூறினார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை கடந்த 2011 இல் வெளியானது. மனித உரிமைகள் ஆணைக்குழுவிலிருந்து தூதுக்குழுவொன்று இலங்கைக்கு சென்ற வருடம் செப்டெம்பரில் வந்து பார்த்துவிட்டுப் போய்விட்டது.

ஆயினும் இலங்கைக்கு வருவதற்கான தனது விருப்பத்தை அவர் இன்னும் இலங்கை அரசாங்கத்துக்கு தெரிவிக்கவில்லை என அமைச்சர் கூறினார்.

இலங்கை வந்து, முன்னேற்றங்களை நேரில் பார்க்கும்படி ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு நாம் பலமுறை கூறிவிட்டோம்.

அவர், முன்வைத்த நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டு விட்டன.

2011 ஆம் ஆண்டு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர், அவர் இலங்கைக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அது இடம்பெறவில்லை என்று வெளியுறவு அமைச்சர் ஜீ. எல் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

### கடற்படையினரின் பேருந்து மின்கம்பத்தில் மோதி விபத்து

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் பானமை பிரதேசத்தில் இருந்து சியம்பலாண்டு வரை கடற்படையினரை ஏற்றிக்கொண்டு பயணித்த பேருந்து மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் 33 ஆயிரம் வோல்ட் மின்கம்பம் முறிந்து குறித்த பேருந்தின் மீது விழுந்துள்ளது.

எனினும், அந்த பேருந்தில் பயணித்த கடற்படை வீரர்கள் 18 பேரும் உயிராபத்துக்கள் எதுவுமின்றி தப்பியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தையடுத்து, பேருந்தின் சாரதி கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### இலங்கையில் நாள்தோறும் 5 சிறுவர் துஷ்பிரயோகங்கள்



(கொழும்பு)

இலங்கையில் நாள் தோறும் ஐந்து சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

நாடு முழுவதிலும் குற்றச் செயல்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது.

பிரதான இரையாக பெண்களும், சிறுவர்களும் குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர் மற்றும் பெண்களை பாதுகாக்க நியமிக்கப்பட்ட அதிகாரிகளே குற்றச் செயல்களில் ஈடுபடுவதாக சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பின் தலைவி திமுது ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பாரிய பிரச்சினை எழுந்துள்ளது. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்துவதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# சட்டக்கல்லூரி நுழைவுப்பரீட்சை விடைத்தாள்கள் மீள் மதிப்பீடு

(கொழும்பு)

சட்டக் கல்லூரியின் 2013 ஆம் ஆண்டுக்கான நுழைவு பரீட்சை விடைத்தாள்கள் மீள் மதிப்பீடு செய்யப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கும் பரீட்சை ஆணையாளருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. இதன் போதே இந்த உறுதிமொழியை அவர் வழங்கியுள்ளார்.

அத்துடன் பரீட்சை வினாத்தாள்கள் வெளியாகியதா என தீர்மானிப்பதற்கும் விசாரணை நடத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பிரச்சினை தொடர்பில் சட்டக் கல்லூரி அதிபர் டப்ளியூ.டி ரொட்ரிகோ பரீட்சைகள் ஆணையாளருக்கு கடிதமொன்றையும் அனுப்பியுள்ளார்.

பரீட்சை முடிவுகள் பாரபட்சமின்றி இருப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் பரீட்சை திணைக்களம் மேற்கொள்ளும் என பரீட்சைகள் ஆணையாளர் இதன்போது உறுதியளித்துள்ளார். பரீட்சை வினாக்கள் பரீட்சைக்கு முன்னர் வெள்ளவத்தையிலுள்ள தனியார் மேலதிக வகுப்பொன்றில் வெளியாகியதை காட்டும் சான்றுகள் உள்ளது என சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர் சங்க பேச்சாளர் றம்ஸி பாஹா தெரிவித்தார்.

குறிப்பிட்ட சில இனக்குழுக்களுக்கு சாதகமாக சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை முடிவுகள் உள்ளதாக கூறி பரீட்சை எழுதிய மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

தமிழ் மொழி மூலம் பரீட்சை எழுதிய 705 பேரில் 133 பேரும் சிங்கள மொழி மூலம் பரீட்சை எழுதிய 6,295 பேரில் 154 பேரும் சட்டக் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் மொழி மூலம் பரீட்சை எழுதிய ஏனையோரைவிட முஸ்லிம் மாணவர்களுக்கு சாதகமாக முடிவுகள் அமைந்திருப்பதாக மாணவர்கள் முறையிட்டமை குறிப்பிடத்தக்கது.

# உளவுத் தகவல்களை வழங்கிய சிப்பாய்க்கு எதிராக வழக்கு


(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு உளவுத் தகவல்களை வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவச் சிப்பாயான ஏ.எம். சமன் சுஜீவ என்பவருக்கு எதிராக இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டில் குறித்த இராணுவச் சிப்பாய், விடுதலைப் புலிகளுக்கு உளவுத்தகவல்களை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பனாகொடை இராணுவ முகாமிலிருந்து கொண்டு குறித்த இராணுவச் சிப்பாய் உளவுத் தகவல்களை வழங்கியதாக



தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் ரயிலிலிருந்து வீழ்ந்து படுகாயமடைந்து ஊனமுற்றுள்ளதாக குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்வித்துறை தரம் உயர மூன்றாண்டு செயற்றிட்டம்

(கொழும்பு)

மாகாண சபைகளும் கல்வி அமைச்சும் கூட்டாக இணைந்து கல்வித் துறையின் தரத்தை உயர்த்துவதற்கான மூன்றாண்டு திட்ட மொன்றை அறிமுகம் செய்துள்ளதாக கல்வித் துறையின்தரத்தை மேம்படுத்தும் வகையில் தேசிய கொள்கைக்கு அமைய மாகாண கல்வி அமைச்சுக்கள் ஊடாக 2015 ஆம் ஆண்டு வரை மூன்றாண்டு திட்டம் செயற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த மூன்றாண்டு திட்டத்தை செயற்படுத்துவதற்குத் தேவையான நிதியை கல்வி அமைச்சுக்கும் மாகாண கல்வி அமைச்சுக்களுக்கும் திறைசேரி வழங்கியுள்ளது.

மாணவர்களுக்குச் சிறப்பான கல்வியை வழங்குவதற்காக ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மூன்றாண்டு திட்டத்தின் ஒரு அங்கமாக பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பவும் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.


# சிறையிலிருந்து கைதிகள் தப்பியோட்டம்

(அவிசாவளை)

அவிசாவளை விளக்கமறியல் சிறைச்சாலையில் சிறையை உடைத்துக்கொண்டு 10 கைதிகள் நேற்று அதிகாலை தப்பியோடிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு தப்பியோடிய கைதிகளை தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர்.

### அமைச்சர் மேர்வின் சில்வாவிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை?



(கொழும்பு)

பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடாத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித மடவல கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்கள் அமைச்சரின் இணைப்புச் செயலாளர்கள் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

அமைச்சரின் நாடாளுமன்ற இணைப்புச் செயலாளர் சிங்கப்பூர் சரத் உள்ளிட்ட ஐந்து பேர், கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களின் தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பிலும் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரண உதவி



(கிளிநொச்சி)

தற்போது பெய்துவரும் தொடர்மழை காரணமாக உருவான வெள்ளப் பெருக்கினால் பாதிப்புக்களை எதிர்கொண்டநிலையில் இடம்பெயர்ந்துள்ள பெரிய பரந்தன் பகுதியைச்சேர்ந்த மக்களுக்கு ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் ஏற்பாட்டில் ஈ.பி.டி.பி கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதனால் நேற்று உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

பெரியபரந்தன் தாரணி குடியிருப்பைச்சேர்ந்த சுமார் 13 வரையானகுடும்பங்களைச் சேர்ந்த சிறுவர், பெண்கள், வயோதிபர்கள் உட்பட 43 பேர் தமது வீடுகளுக்குள் மழை நீர்புகுந்ததததால் இடம்பெயர்ந்து அப்பகுதியில் உள்ள முன்பள்ளியில் வசித்து வருகின்றனர். அவர்களுக்கான சமைத்த உணவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் மேற் கொண்டுள்ளார். அவர் நேற்றுக் காலை குறித்த பகுதிக்கு நேரில சென்று பாதிப்புக்குள்ளானவர்களின் வீடுகளைப் பார்வையிட்டதுடன் மக்களுக்கு பால்மா உள்ளிட்ட உலருணவுப் பொதிகளையும் மற்றும் உணவல்லாத பொருட்களையும் வழங்கினார். அத்தோடு அம்மக்களுக்கு தொடர்ந்தும் சமைத்த உணவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் அவர் மேற் கொண்டார்.

இதன்போது பெரியபரந்தன் பகுதி கிராமசேவையாளர் சிம்சன்போல், பெரிய பரந்தன் திட்டக்குழுத்தலைவர் விக்டர், அப்பகுதி மாதர்கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவி கமலா ஆகியோரும் பலரும் கலந்து கொண்டனர்.

# பாரதி நகர் – 3 ஆம் யுனிற் வீதி புனரமைக்கப்படுவது எப்போது?



(மல்லாவி)

துணுக்காய் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட பாரதிநகர் 3ஆம் யுனிற் வீதி நீண்டகாலமாக திருத்தப்படாது மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளதால் இவ்வீதியூடாக மக்கள் பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

குறித்த வீதி மணல் வீதியாகவே காணப்படுவதாகவும் மழை காலங்களில் வெள்ள நீர் தேங்கி வீதி சேறும் சகதியுமாக காட்சியளிப்பதுடன் வாகனங்கள் சேற்றில் புதையும் நிலையும் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக இவ்வீதியூடாக நாளாந்தம் பலர் தமது பயணங்களை மேற்கொள்கின்ற நிலையில் குறித்த வீதி சேதமடைந்துள்ளதால் மக்கள் பயணம் செய்வதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே பொது மக்களின் போக்குவரத்து தேவைகளை கருத்திற்கொண்டு இவ்வீதியை ஓரளவேனும் திருத்தி செப்பனிட உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

## முரசின் இன்றைய பலன்

(11.01.2013 – வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி மாதம் 27 ஆம் திகதி.
பூராடம் பின்னிரவு 12.17 வரை. திதி அமாவாசை
பின்னிரவு 1.59 வரை. இராகுகாலம் 11.03 - 12.33 வரை.
சுபநேரம் 6.33 - 08.03 வரை. சித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் வெற்றி. பிள்ளைகளால் பெருமை. கல்யாண பேச்சு. தாயார் வழியில் ஆதரவு. தொழில் முன்னேற்றம். உடல்நலம் சீர்பெறும். |
| ரிஷபம் | ஆறுதல் தேடும் மனநிலை. வரவை விடசெலவு கூடும். நண்பர், குடும்பத்தினரிடமிருந்து ஆதரவு. உடல்நலத்திற்கு உணவில் கவனம். |
| மிதுனம் | துணிச்சலாக முடிவுகள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசை. தாராள பணவரவு. நண்பருக்கு உதவி. அரசால் இலாபம். பிரபலங்கள் அறிமுகம். |
| கடகம் | மனதில் பயம் வரும். கணவன்–மனைவிக்குள் வீண் சந்தேகம். எதிர்பார்த்தவை தாமதம். பயணத்தில் கவனம். குடும்பம் அனுசரிக்கும். |
| சிம்மம் | குளறுபடிகள் ஏற்படும். வெறுப்பை பிறரிடம் வெளிப் படுத்த வேண்டாம். போக்குவரத்தில் கவனம். பண வரவு சுமார். கூடுதல் உழைப்பு தேவை. |
| கன்னி | நிதானச் செயற்பாடு. தேவையற்ற பேச்சைத் தவிர்க்க. கூடுதல் பணிச்சுமை. தோல்விக்கு வருந்துவீகள். வெளியூர் பயணம். |
| துலாம் | தேவையற்ற சஞ்சலம். சிந்தித்து செயற்பட வெற்றி. அதிக உழைப்பு. சிக்கனம் நல்லது. ஆரோக்கியத்தில் கவனம். உறவினர்களால் குழப்பம். |
| விருச்சிகம் | நண்பர், உறவினர்களுக்காக செயல்படுவீர்கள். மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். தொழிலில் சாதனை. புதிய பணி திட்டங்கள். |
| தனுசு | கூடுதல் வளம் பெற அனுகூலம். உறவினர் நண்பரிடம் நல்மதிப்பு. தொழில் இலக்கு நிறைவேறும். தேவையான பணவரவு. மங்கல நிகழ்ச்சி திட்டம். |
| மகரம் | அடுத்தவர் பணியையும் செய்ய நேரும். நம்பிக்கை அதிகரிக்கும். தொழிலில் நஷ்டம் வரலாம். செலவு அதிகரிப்பதால், கவலை. |
| கும்பம் | மனதில் அன்பும், கருணையும். உதவிகள் செய்வீர்கள். தொழில் தடைவிலகும். கொடுக்கல், வாங்கல் சீராகும். இல்லறத்துணை அனுசரணை. |
| மீனம் | சமூகத்தில் உயர்மதிப்பு. பாராட்டு, எதிர்பார்த்த வெற்றி. தொழில் சிறந்து, அதிக பணவரவு. குடும்ப தேவைகள் நிறைவேறும். உறவினர் வருகை மகிழ்ச்சி. |

# தொடர் கனமழையால் வெங்காயச் செய்கை பாதிப்பு

(அச்சுவேலி)

குடாநாட்டின் பல பகுதிகளிலும் மீண்டும் ஆரம்பித்துள்ள கடும் மழை காரணமாக வெங்காயப் பயிர்ச் செய்கையாளர்களும், மரக்கறிப் பயிர்ச் செய்கையாளர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக அச்சுவேலிப் பகுதியில் பல பகுதிகளிலும் வெங்காயப் பயிர்கள் நீரில் முழுமையாக மூழ்கி அழுகிப் போகும் அபாயத்தில் உள்ளன. கடந்த திங்கட்கிழமை இரவு முதல் மீண்டும் ஆரம்பித்த கடுமையான மழையினால் அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால், புத்தூர், நீர்வேலி போன்ற பிரதேசங்களில் வெங்காயம் நடுகை செய்யப்பட்ட தோட்ட நிலங்களில் வெள்ளநீர் வழிந்தோட முடியாது தொடர்ந்து தேங்கி நிற்பதால் அப்பகுதி விவசாயிகள் பலரும் செய்வதறியாத ஓர் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மழை சற்று ஓய்வடையும் வேளைகளில் தோட்டங்களில் தேங்கியுள்ள வெள்ளநீரை நீர் இறைக்கும் இயந்திரங்களின் மூலமும், கையினாலும் இறைத்து வெளியேற்றி வருகின்ற போதிலும், தொடந்தும் மழை பெய்து வருவதால் விவசாயிகளின் இம் முயற்சி தோல்வியடைந்துள்ள நிலையில் அடுத்து என்ன செய்வது என்று தடுமாறிய நிலையில் அவர்கள் உள்ளனர். இவ்வாறு நீர் தேங்கியுள்ள நிலையில் அவை முற்றாக அழிவடையும் பட்சத்தில் ஒவ்வொருவரும் பல ஆயிரம் ரூபா நஷ்டத்திற்கு உள்ளாகும் நிலை ஏற்படும் எனவும் அவர்கள் மிகவும் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை ஆவரங்கால் கிழக்கு பிரதேசத்தில் மரக்கறிப் பயிர்ச்செய்கை நிலங்களிலும் தொடர்ந்து வெள்ளநீர் தேங்கி நிற்பதால் அவையும் அழிவடையும் நிலையில் உள்ளதாகவும் விவசாயிகள் மேலும் தெரிவிக்கின்றனர். (03)

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி அருள்மிரு நாக கன்னியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் அன்றையதினம் தீமிதிப்பு வைபவமும் இடம் பெற வுள்ளது.

# ஜி.ரி.இசற் நிறுவனத்தால் பாடசாலைத் தோட்டம் அமைப்பு

ஜி.ரி.இசற் நிறுவனத்தின் நிதியில் கடந்த ஆண்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் 5 பாடசாலைகளில் பாடசாலைத் தோட்டம் அமைக்கப்பட்டது.

சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம், வட்டக்கச்சி மகா வித்தியாலயம், பிரமந்தனாறு மகாவித்தியாலயம், தர்மபுரம் மகா வித்தியாலயம், கண்டா வளை மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே இவ்வாறு பாடசாலைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டது.

பாடசாலை மாணவரின் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் ஒன்றாகிய பாடசாலைத் தோட்டம் அமைப்பதன் ஊடாக மகிழ்வான கற்றல் செயற்பாடுகளை ஊக்குவித்து பாடசாலை மாணவர்களின் மதிய உணவுத் தேவையில் ஒரு பகுதியை பாடசாலை வளத்திலிருந்தே பெற்றுக்கொள்வதும் இதன் நோக்கமாகும்.

கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்வித்திணைக்களம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் செயற்பாட்டாளர் பங்கை வகித்தது.

இவ் ஆண்டிலும் மேலும் பல பாடசாலைகளில் பாடசாலைத்தோட்டத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் வலயக் கல்வித் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. (90)

## தொலைபேசி அன்பளிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட வடமராட்சி இந்து ஆரம்பப் பாடசாலைக்கு மாணவர்களின் பெற்றோர்கள் இணைந்து புதிய தொலைபேசி ஒன்றை வழங்கியுள்ளனர்.

ரெலிக்கொம் நிறுவனத்தினுடைய 021 226 0199 என்ற இலக்கம் பாடசாலையின் தொலைபேசி இணைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. (109)

## மும்பை அணியில் அர்ஜுன் டெண்டுல்கர்



(மும்பை)

14 வயதுக்கு உட்பட்டோருக்கான மும்பை அணியில் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சினின் மகன் அர்ஜுன் டெண்டுல்கர் இடம் பிடித்தார். இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் (வயது-39). இவரது மகன் அர்ஜுன் டெண்டுல்கர் (வயது- 13). இவர், அகமதாபாத்தில், ஜனவரி 20ஆம் திகதி முதல் பெப்ரவரி 1ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 14 வயதுக்கு உட்பட்டோருக்கான மேற்கு மண்டல லீக் தொடரில், மும்பை அணிக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு மே மாதம் மும்பையில் நடந்த 14 வயதுக்கு உட்பட்டோருக்கான அணி தேர்வுக்கான பயிற்சியில் சதம் அடித்தார். ஏற்கனவே இவர், கோரெகான் சென்டர் அணிக்கு எதிரான போட்டியில் சதம் (124 ஓட்டங்கள், 14 பவுண்டரி,ஒரு சிக்சர்)அடித்து கார் ஜிம்கானா அணியை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்றார். இடது கை துடுப்பாட்ட வீரரான இவர், 2011 ஆண்டில் முதல் முறையாக தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்றார்.

# இந்தியா தொடரை வெல்லும்

(லண்டன்)

இங்கிலாந்து அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை இந்திய அணி கைப்பற்றிக் கொள்ளும் என இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரரும், நேர்முக வர்ணனையாளருமான ஜெப்றி போய்கொட் தெரிவித்துள்ளார்.

ஒரு நாள் போட்டியைப் பொறுத்த வரை இந்திய அணி தோற்கடிக்கக் கடினமான அணி.

இந்திய ஒரு நாள் அணியிலிருந்து சச்சின் வெளியேறியுள்ள நிலையில், இன்னமும் சிறந்த வீரர்கள் உள்ளனர். மகேந்திரசிங் டோனி மிகச்சிறப்பான வீரர். ஹோலி சிறப்பான முறையில் செயற்பட்டு வருகின்றார். அவருக்கு சிறப்பான எதிர் காலம் இருக்கின்றது. அவரின் ஆட்டம் பட்டை தீட்டப்பட்டு வருகின்றது. புதுப் பொலிவு பெற்று வருகின்றது.

இந்திய அணி அண்மைக்காலத் தோல்விகளை வைத்து அதன் பலத்தை குறைத்து மதிப்பிட முடியாது. அதிலிருந்து விடுபட்டு இங்கிலாந்து அணிக்கெதிரான ஒரு நாள் போட்டித் தொடரை சிறப்பாக எதிர்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது. அந்த வகையில் ஒரு நாள் தொடரைஇந்திய அணி கைப்பற்றிக் கொள்ளும் என நம்புகின்றேன். இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டத்தைஎடுத்துக்கொண்டால் அணித்தலைவர் குக் சிறப்பாக ஆடக்கூடிய வர்தான். ஆனால் அவரது ஆட்டம், ஒரு நாள் போட்டியில் வெற்றிதரக்கூடியதல்ல. பந்து வீச்சாளர்கள் விரைவாக விக்கெட்டுக்களை வீழ்த்தி இந்திய அணிக்கு நெருக்கடி கொடுக்கலாம். அது எல்லாப் போட்டிகளிலும் சாத்தியமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.



## இன்றைய ஆட்டங்கள்

(ராஜ்கோட்)

இந்திய, இங்கிலாந்து அணிகளுக் கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் இன்றைய தினம் பகலிரவு ஆட்டமாக ராஜ்கோட்டில் நடைபெறவுள்ளது.

பனிப்பொலிவு அதிகமாக இருக்கும் என்பதால் இப்போட்டி நண்பகல் 12.00 மணிக்கே ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

* * *

(மெல்போர்ன்)

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக் கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது ஆட்டம் மென்போர்னில் இன்று இடம்பெறவுள்ளது.

ஏற்கெனவே, டெஸ்ட் தொடரை முழுமையாக இழந்துள்ள இலங்கை அணிக்கு இப்போட்டி பெரும் சவால் நிறைந்ததாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

* * *

(பேர்த் எலிசபெத்)

தென்னாபிரிக்க, நியூசிலாந்து அணிக் கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்றைய தினம் தென்னாபிரிக்காவின் பேர்த் எலிசபெத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இரண்டு போட்டிகளைக் கொண்ட இப்போட்டித் தொடரில் முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி இனிங்ஸ் வெற்றி பெற்று தொடரில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டாவது சுற்றில் சாய்னா

கொரிய சூப்பர் சீரிஸ் பட்மின்ரன் போட்டியில் இந்தியாவின் சாய்னா நெவால் 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

தென் கொரிய தலைநகர் சியோலில் கடந்த புதன்கிழமை தொடங்கிய இந்தப் போட்டியில் சாய்னா தனது முதல் சுற்றில் 17-21, 21-9, 21-19 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் சப்ஸ்ரீயை தோற்கடித்தார். சர்வதேச தரவரிசையில் 3ஆவது இடத்தில் உள்ள சாய்னா அடுத்த சுற்றில் சிங்கப்பூரின் மிங்டியானை சந்திக்கிறார். சாய்னாவும், மிங்டியானும் இதற்கு முன்னர் 3 முறை மோதியுள்ளனர். அவையனைத்திலும் சாய்னாவே வெற்றி கண்டுள்ளார்.

## போல் ஹரிஸ் ஓய்வு

தென்னாபிரிக்க அணியின் முன்னாள் இடதுகைச் சுழற்பந்து வீச்சாளர் போல் ஹரிஸ் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார். தென்னாபிரிக்கா சார்பாக 37 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றிய அவர், 103. விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார். இறுதியாக 2011ஆம் ஆண்டு தென்னாபிரிக்கா சார்பாக டெஸ்ட் போட்டியில் பங்குபற்றிய அவர், அதன் பின்னர் அணியிலிருந்து நீக்கப்பட்டதோடு, இம்ரான் தாஹிர் அணியில் சேர்க்கப்பட்டிருந்தார்.

தனது கிரிக்கெட் வாழ்வில் உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகத் தெரிவித்த போல் ஹரிஸ், தனது கிரிக்கெட் வாழ்விற்கு உதவியாக அமைந்த மிக முக்கியமானவரான ரிச்சாட் பைபஸிற்குத் தனது விசேடமான நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.34 வயதான போல் ஹரிஸ், சிம்பாப்வேயில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அணியில் அதிக மாற்றம் தொடரை வெல்லக் காரணம்



(லாகூர்)

பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் பாகிஸ்தான் அணியில் ஏராளமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார். அந்த மாற்றமே எமக்கு பல முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. அத்துடன் இந்திய அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை வெல்ல முடிந்தது என பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல்ஹக் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளராகப் பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாகும் நிலையில் அவுஸ்ரேலியரான டேவ் வட்மோர் பாகிஸ்தான் அணியில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தவில்லை எனச் சில விமர்சனங்கள் எழுப்பப்பட்டிருந்தன. இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மிஸ்பா உல்ஹக் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், பாகிஸ்தான் அணியில் டேவ் வட்மோர் தேவை யான ஏராளமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார். அணியின் தலைவர், வீரர்கள் மீது அவர் நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார். டேவ் வட்மோர் – அவுஸ்ரேலியர் என்பதால் அவர் மீது தேவையற்ற விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒரு பயிற்றுவிப்பாளர் அணியில் ஏற்படுத்திய மாற்றங்கள், சாதித்தவற்றைக் கொண்டே கணிக்கப்பட வேண்டும். எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பதை வைத்துக் கணிப்பிடக்கூடாது.

டேவ் வட்மோரின் கீழ் பாகிஸ்தான் அணி ஆசியக் கிண்ணத்தை வெற்றிகொண்டது. மற்றும் இங்கிலாந்திற்கெதிரான டெஸ்ட் தொடர் வெற்றி, உலக ருவென்ரி–20 தொடரில் அரையிறுதி வரை முன்னேறியமை, இந்தியாவிற்கெதிரான ஒரு நாள் தொடர் வெற்றி ஆகியவற்றைப் பாகிஸ்தான் சாதித்துள்ளது. இவை எல்லாம் வட்மோரின் பயிற்றுவிப்பின் கீழேயே இடம்பெற்றுள்ளது. எனவே, அவரைக் குறை சொல்வதை நிறுத்திக்கொள்ளுங்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 2020 ஒலிம்பிக் போட்டியை நடத்த துருக்கி, ஸ்பெயின், ஜப்பான் கடும் போட்டி

2020 ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கான வாய்ப்பை பெறுவதற்காக இஸ்தான்புல் (துருக்கி), மாட்ரிட் (ஸ்பெயின்), டோக்கியோ (ஜப்பான்) ஆகிய நகரங்கள் போட்டியிடுகின்றன.

இது தொடர்பாக சுவிட்சர்லாந்தின் லாசன்னே நகரில் உள்ள சர்வதேச ஒலிம்பிக் சபையின் (ஐ.ஓ.சி.) தலைமை அலுவலகத்தில் மேற்கண்ட 3 நகரங்கள் சார்பில் பல்வேறு விவரங்கள் அடங்கிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. முன்னைய மற்றும் 2016 ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான ஏலத்தில் இந்த நகரங்கள் பங்கேற்றாலும், வாய்ப்பு கிடைக்கவில்லை.

சர்வதேச பொருளாதார நிலை ஸ்திரமாக இல்லாதபோதிலும், ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கான போட்டியில் மாட்ரிட் நகரம் தொடர்ந்து 3ஆவது முறையாக பங்கேற்கிறது. டோக்கியோ தொடர்ந்து 2ஆவது முறையாகவும், இஸ்தான்புல் 5ஆவது முறையாகவும் போட்டியில் பங்கேற்கின்றன.

ஒலிம்பிக் போட்டிக்கான மைதானங்கள், பட்ஜெட், நிதி உத்தரவாதம், பாதுகாப்பு ஏற்பாடுகள், விளையாட்டு கிராமம், போக்குவரத்து வசதி உள்ளிட்ட பல்வேறு விபரங்களை உள்ளடக்கிய 100 பக்கங்கள் கொண்ட புத்தகத்தை மேற்கண்ட 3 நகரங்களும் அளித்துள்ளன. இது தொடர்பாக சர்வதேச ஒலிம்பிக் சபையின் மதிப்பீட்டுக் குழு வரும் மார்ச் மாதம் மேற்கண்ட 3 நகரங்களுக்கும் நேரில் சென்று ஆய்வு செய்யும். அதன்பிறகு வரும் ஜூலையில் லாசன்னே நகரில் நடைபெறவுள்ள ஐ.ஓ.சி. கூட்டத்தின்போது மதிப்பீட்டுக் குழு தங்களின் அறிக்கையை அளிக்கும்.

அதைத்தொடர்ந்து செப்டம்பர் 7ஆம் திகதி ஆர்ஜென்டீனாவின் தலைநகர் பியூனஸ் அயர்ஸில் நடைபெறும் ஐ.ஓ.சி. கூட்டத்தின்போது இரகசிய வாக்கெடுப்பு நடத்தி போட்டியை நடத்தும் நகரம் தேர்வு செய்யப்படும்.

முன்னதாக 2020ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்த ரோம் (இத்தாலி), பாகு (அஜர்பைஜான்), தோஹா (கத்தார்), டோக்கியோ, இஸ்தான்புல், மாட்ரிட் ஆகிய 6 நகரங்கள் விருப்பம் தெரிவித்திருந்தன. ரோமில் நடத்த இத்தாலி அரசு நிதியுதவி அளிக்க மறுத்ததைத் தொடர்ந்து அந்த நகரம் போட்டியிலிருந்து விலகியது.

தோஹா, பாகு நகரங்களை போட்டியிலிருந்து ஐ.ஓ.சி. நீக்கியது குறிப்பிடத்தக்கது.

## பிளட்சரை நீக்கவேண்டும்

(புதுடில்லி)

இந்திய அணியின் தோல்விக்கு பயிற்சியாளர் பிளட்சரின் செயற்பாட முக்கிய காரணம். அவரை உடனடியாக நீக்க வேண்டும் என்று முன்னாள் கப்டன்கள் வெங்சர்க்கார், அஜீத் வடேகர் ஆகியோர் வலியுறுத்தி உள்ளனர்.

இது தொடர்பாக வெங்சர்க்கார் கருத்துத் தெரிவிக்கையில், இந்திய அணியில் தற்போது டோனி ஒருவரே நல்ல நிலையில் உள்ளார். இதனால் அவர் தொடர வேண்டும். கப்டன் பதவியில் அவரை விட்டால் தற்போது சிறந்தவர்கள் இல்லை. பயிற்சியாளர் பிளட்சரின் செயற்பாடு சராசரியைவிட குறைவாக இருக்கிறது. இதனால் அவரை நீக்க வேண்டும்.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் மிகவும் சிறப்பாக விளையாடியது. அனைத்து துறையிலும் அந்த அணி சிறப்பாக இருந்தது. இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இந்திய அணி அனைத்து வகையிலும் முன்னேற்றம் அடைவது அவசியமாகிறது. துடுப்பாட்ட வீரர்கள் கண்டிப்பாக முன்னேற்றம் காணவேண்டும்.

இந்திய அணியின் சமீபகால தோல்விகளுக்கு அதிகமான போட்டிகளில் விளையாடியதுதான் காரணம் எனத் தெரிவித்தார். அஜீத் வடேகர் கருத்துத் தெரிவிக்கையில், டோனியின் செயற்பாடு நன்றாகவே உள்ளது. இந்திய அணியின் வெற்றிக்கு பெரும்பாலான நேரங்களில் அவர்தான் பொறுப்பாக இருந்து இருக்கிறார். பயிற்சியாளரை நீக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வீதியோட்டம்

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினால் மாவட்ட ரீதியில் குறுக்கோட்டம் என அழைக்கப்படும் வீதிகள் மற்றும் வயல் நிலங்களுக்கூடான 12 கிலோமீற்றர் ஓட்டப்போட்டி வரும் 12ஆம் திகதி மானிப்பாயில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட அனைத்து விளையாட்டுக் கழக வீரர்களும் கலந்துகொள்ளலாமென யாழ். மாவட்ட பதில் விளையாட்டு அதிகாரி எம்.ஆர்.மோகனதாஸ் தெரிவித்தார்.

## உடுவில் மான்ஸ் சம்பியன்

வடமாகாண பூப்பந்தாட்டச்சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில், உடுவில் மான்ஸ் அணி இரு பிரிவிலும் சம்பியனாகியது. வடமாகாண பூப்பந்தாட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி சென்.ஜோன்ஸ் கல்லூரி பூப்பந்தாட்டத் திடலில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் நடைபெற்று வந்தது.

பெண்களுக்கான போட்டியில் உடுவில் மான்ஸ் விளையாட்டுக்கழக அணி சம்பியனாகியதுடன், இரண்டாமிடத்தினை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி பெற்றுக் கொண்டது. ஆண்களுக்கான போட்டியில் உடுவில் மான்ஸ் விளையாட்டுக்கழகம் முதலாமிடத்தையும், இரண்டாமிடத்தினை மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழக அணி பெற்றுக் கொண்டது.

# மாற்றுவலுவுள்ளோருக்கான கூடைப்பந்து பயிற்சி முகாம்



(வவுனியா)

மாற்றுத்திறனாளிகளுக்கான கூடைப்பந்தாட்ட பயிற்சி முகாம் வவுனியா நகரசபை கூடைப்பந்தாட்டத் திடலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலகத்தின் விளையாட்டுத்துறையினூடாக கன்டிக்கப் இன்ரநஷனல் நிறுவனத்தின் எல்லோருக்கும் விளையாட்டு என்னும் கருத்திட்டத்தின் அனுசரணையில் இடம்பெற்ற இப்பயிற்சி முகாமில் ஆண்கள், பெண்களென இரு பாலாரும் பங்கேற்றனர். இவர்கள் வரும் 13ஆம் திகதி இடம்பெறவுள்ள பிரதேச கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

# இறுதிப் போட்டியில் வல்வெட்டித்துறை கழுகுகள்

(வடமராட்சி)

வடமராட்சி அண்ணாசிலையடி விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறு திப் போட்டிக்கு வல்வெட்டித்துறை கழுகுகள் அணி தகுதி பெற்றுள்ளது. யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் வடமராட்சி அண்ணாசிலையடி விளையாட் டுக்கழகத்தினால் அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர் கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டு வருகின்றது.

இதில் கடந்த சனிக்கிழமை அண்ணாசிலையடி விளையாட்டுக்கழக மைதானத்தில் இரண்டாவது அரையிறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் அணியும் வல்வெட்டித்துறை கழுகுகள் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் சுன்னாகம் காந்தி நியூஸ்ரார் அணி 4.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றது. இதில் துசியந்தன் 28, ஜீவன் ஆறு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் முரளி இரண்டு, செந்தூரன், திவா தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். பதிலுக்கு 43 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கழுகுகள் அணி 4.2 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் முரளி 12, ரமேஸ் 16, கோகுலன் ஒன்பது ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜிந்தா, கண்ணன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இதன் மூலம் கழுகுகள் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

ஏற்கனவே, அளவெட்டி மத்தி அணி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (93)




# மனோகரா, அண்ணாசிலையடி அணிகள் வெற்றி

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தி வருகின்றது.

பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இப்போட்டியில் மனோகரா, அண்ணாசிலையடி அணிகள் வெற்றியீட்டியுள்ளன. இப்போட்டியில் முதலில் அல்வாய் மனோகரா 'ஏ' அணியை எதிர்த்து நெல்லியடி சுடர்ஒளி அணி மோதியது. இதில் 4 : 3 என்ற கோல் கணக்கில் மனோகரா அணி வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டியில் அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது. இதில் நவிண்டில் கலைமதி அணி 4 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

# இறுதிப் போட்டியில் ஸ்ரீமுருகன், கொக்குவில் ஏ.பி.

(பருத்தித்துறை)

பருத்தித்துறை லைற் ஹவுஸ் உணவகத்தின் அனுசரணையுடன் புலோலி நண்பர்கள் விளையாட்டுக்ழகத்தினால் நடத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு வதிரி ஸ்ரீமுருகன், கொக்குவில் ஏ.பி. அணிகள் தகுதிபெற்றுள்ளன.

பத்து ஓவர்களைக் கொண்ட இப்போட்டித் தொடர் மாவட்ட அளவில் இடம்பெற்றது.

கடந்த வாரம் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் வதிரி ஸ்ரீமுருகன், கொக்குவில் ஏ.பி., வல்லை அணி, அளவெட்டி மத்தி அணிகள் மோதின.

இதில் முதலாவதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் வதிரி ஸ்ரீமுருகன் அணியை எதிர்த்து அளவெட்டி மத்தி அணி மோதியது.

இதில் அளவெட்டி மத்தி அணியை 14 ஓட்டங்களால் வெற்றிபெற்ற ஸ்ரீமுருகன் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கொக்குவில் ஏ.பி. அணியும், வல்லை அணியும் மோதின. இதில் கொக்குவில் ஏ.பி. அணி 19 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதிப் போட்டி விரைவில் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இறுதிப் போட்டி புற்றளை மகா. வித்தியாலய மைதானத்தில் இடம்பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர். (109)

# மாதகல் காந்திஜீ பொன்விழா கிரிக்கெட் சங்கானை ஞானவைரவர் வசம் கிண்ணம்



(மாதகல்)


மாதகல் கிழக்கு காந்திஜீ விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட பொன்விழா நிறைவு மென்பந்து கிரிக்கெட் தொடரில் சங்கானை ஞானவைரவர் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

மாதகல் கிழக்கு காந்திஜீ சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு அதன் விளையாட்டுக்கழகத்தினால் மாவட்ட அளவில் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் தொடரை நடத்தியது.

பத்து ஓவர்கள் கொண்ட ஆட்டமாக இடம்பெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஆறாம் திகதி மாலை 4.00 மணிக்கு மாதகல் அம்மாள் கோவிலடி மைதானத்தில் நடைபெற்றது. இதில் மாதகல் சென் தோமஸ் அணியும், சங்கானை ஞானவைரவர் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மாதகல் சென். தோமஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 43 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சங்கானை ஞானவைரவர் அணி 4.5 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 23 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சென். தோமஸ் அணியினர் நடுவரின் தீர்பை மதிக்காது அநாகரீகமான முறையில் நடந்துகொண்டமையால் ஆட்டம் தொடர்ந்தும் நடத்தப்படவில்லை. இதனால், விருந்தினர்கள், நடுவர்கள், கழக முக்கிஸ்தர்கள் கூடி வெற்றி தோல்வியைத் தீர்மானித்தனர். இதன்படி சங்கானை ஞானவைரவர் அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் ஞானவைரவர் அணி கிண்ணம் வென்றது. இந்நிகழவில் சிறப்பு விருந்தினராக மானிப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ஜீவா, மாதகல் சமூக மட்ட அமைப்புகளின் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (54)





# கைவிடவேண்டிய எதிர்ப்பு அரசியல்!

50 வருட காலத்திற்கும் மேலாக புரையோடிப் போயிருக்கும் இனவாத உணர்வுகளை மையமாக கொண்டே எமது அரசியல் கட்சிகள் காலத்தை ஓட்டுகின்றன. இதற்கு தென்னிலங்கை, வட- இலங்கை என்கின்ற வேறுபாடு கிடையாது. இன்னும் சொல்லப் போனால் சிங்கள இனவாத கட்சிகளுக்கு உத்வேகம் அளிப்பதாக தமிழ் இனவாத கட்சிகளும், தமிழ் இனவாத கட்சிகளின் உயிர் நாடியாக சிங்கள மேலாண்மை வாத கருத்துக் களும் ஒன்றில் ஒன்று தங்கியே வளர்ந்து வந்திருக் கின்றன. இதன் காரணமா- கவே இன்றுவரை ஒருசாரார் இனவாத கருத்துக்களை கக்குவதும் மறுசாரார் அதற்கு தடாலடி பதிலுரைப்பதுமாக மட்டுமே எமது அரசியல் கட்சிகளின் அன்றாட செயற்பாடுகளாகி நிற்கின்றது. இந்த பதிலுரைப்புகளும், மறுப்பறிக் கைகளும் மட்டுமே ஒவ்வொரு தேர்தல்களிலும் அரசியல் கட்சிகளின் மூலதனமாக மாறியுள்ளது.

சிங்கள மக்கள் மத்தியிலிருந்து காலத்திற்கு காலம் தோன்றிவந்த இனவெறி கருத்து கொண்டோரை அம்மக்கள் வாழ வைப்பதை விட தமிழ் மக்கள் மத்தியில் இனவாத உணர்வுகளை தூண்டி அரசியல் செய்தவர்கள் மிகமிக அதிகமாகவே வாழ்த்தி வரவேற்கப்பட்டிருக்கின்றார்கள். இல்லாவிட்டால் இன்றுவரை தமிழ் தேசிய கூட்டமைப்பு போன்ற கொள்கைகள் திட்டங்கள் ஏதுமற்ற ஒரு கட்சி நமது சமுகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக வலம் வர முடியாது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகளை நோக்கியே இந்த கட்சிகள் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கொண்டு வரும் என்று நமது மக்களும் இலவு காத்த கிளிகளாக காத்திருக்கின்றார்கள். இந்த காத்திருப்பிற்கு நாம் என்ன பதில் சொல்ல போகின்றோம் என்கின்ற குறைந்த பட்ச பொறுப்புணர்வு ஏதுமின்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் காலத்தை கடத்திவரும் நிலை மாற வேண்டும். இன்றைய நிலையில் எமது மக்களுக்கு எது தேவை என்கின்ற யதார்த்த சிந்தனை தமிழ்த் தலைவர்களுக்கு வர வேண்டும். தொடர்ச்சியாக மக்களின் இன உணர்வுகளை மூலதனமாக கொண்டு அரசியல் செய்ய முடியாது என்பதை குறிப்பாக கூட்டமைப்பினர் உணர வேண்டும்.

கடந்த கால போர்சூழல் மக்களை இன்றுள்ள நவீன உலகுடன் தொடர்புகொள்ள முடியாதவாறு முடக்கிப் போட்டிருந்தது என்னமோ உண்மை தான். கட்டுப்பாட்டுப் பிரதேசம், பொருளாதார தடைகள், கருத்துச் சுதந்திர மறுப்பு என்று மக்களின் சிந்தனை மழுங்கடிக்கப்பட்டு கிடந்த காலம் மலையேறி விட்டது. கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும், அல்லது மட்டக்களப்பிற்கும் கொழும்பிற்கும் இருந்த நாட்கணக்கான பயணம் இன்று நாலைந்து மணி நேரமாக மாறிவிட்டது. படுவான் கரை யில் இருந்து ஆயிரக்கணக்கில் சிறுவர்களைப் பிடித்து வன்னிக்கு கொண்டு செல்லும் செய்தியை கொழும்புக்கு கூட தெரியாமல் இருந்த காலம் இன்றில்லை. இன்று அதே படுவான்கரை மக்கள் இப்பூவுலகையே உள்ளங்கைக்குள் வைத்துகொண்டு ஐ - போன்களுடன் உலா வருகின்றனர்.

எனவே மக்களை தொடர்ந்து உரிமை உணர்ச்சிவயப்படுத்தி அரசி யல் செய்யும் நிலை மாறவேண்டும். சில நாட்களுக்கு முன்னர் திவிநெகும சட்டமூலத்திற்கு ஆதரவு வழங்குமாறு கோரி இலங்கை சுதந்திர சமுர்த்தி முகாமையாளர்கள், இணைப்பாளர்கள் சங்கம் மற்றும் அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி, விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனை மட்டக்களப்பில் வைத்து சந்தித்து கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் மாற்றம் வர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். ஏனெ- னில் திவிநெகும சட்டமூலம் என்பது ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதார பிரச்சினையாகும். இது புரியாது எதிர்ப்பு அரசியல் மட்டுமே நாம் செய்வோம் என்று கூட்டமைப்பினர் தொடர்ந்தும் அடம் பிடிக்க முடியாது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.


மக்களின் பிரச்சினைகளில் பங்கெடுக்க மறுத்து அபிவிருத்தியை காலால் எட்டியுதைக்கும் எதிர்ப்பரசியல் இன்னும் நீண்ட நாளைக்கு செல்லுபடி யாகாது. சுமார் முப்பது வருட கால யுத்தத்தில் மக்களின் வாழ்வு சின்ன பின்னமாக்கப்பட்டுள்ளது. இன்றைய மக்களின் தேவை கல்வியறிவு, பொருளாதாரம், வேலைவாய்ப்பு போன்றவற்றில் எமது மக்கள் மீண்டெழ வேண்டும். இவற்றினையிட்டு கவலை கொள்ளாது மீண்டும் ஆர்ப்பாட்டம் ஊர்வலம் என்று இளம் சமூகத்தினரை பலி கொடுக்கும் அரசியலை விட்டொழிக்க முன்வர வேண்டும். மக்களின் வாழ்வை வளம் படுத்த அதற்கான வழிமுறைகளை தேடி புதியதொரு அரசியல் பாதையை கூட்டமைப்பினர் இனியாவது வகுத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் தேசியவாத அரசியல் தலைமைகளில் மக்கள் நம்பிக்கை இழப்பதை யாராலும் தடுக்க முடியாது போகும் என்பது உறுதி.

**- எழுகதிரோன் கட்டுரையிலிருந்து.**

---

"எதுக்கும் நேரமே இல்லை... 24 மணி நேரம் போதவே இல்லை... அந்த வேலையை முடிக்க வில்லை... இந்த வேலையை முடிக்கவில்லை... அங்கே போக முடியவில்லை... இங்கே போக முடியவில்லை..." என்று நம்மில் பலர் புலம்புவதைப் பார்த்திருக்கிறோம். அது எல்லாம் சும்மாதான்

# நேர நிர்வாகம்



என்கிறார்கள் இதுபற்றி ஆய்வு செய்தவர்கள். அவ்வேலைகளைச் செய்வதற்கு, அவ்விடங்களுக்குச் செல்வதற்கு, அவர்கள் மனது வைக்கவில்லை என்பது தான் உண்மையான காரணமாக இருக்க முடியுமாம்! ஒரு செயலை செய்து முடிக்க வேண்டும் என உளப்பூர்வமாக நினைத்தால் அதற்கு கண்டிப்பாக நேரம் கிடைக்கும்!

ஒரே நேரத்தில் இரண்டு செயல்களைச் செய்ய முடியும். சிலர் ஒரே நேரத்தில் மூன்று, நான்கு செயல்களை கூட செய்கின்றனர். உதாரணமாக, பாட்டுக் கேட்டுக் கொண்டே, தோட்ட வேலை செய்யலாம், "டிவி" பார்த்துக் கொண்டே சலவை செய்த துணிகளை மடித்து வைக்கலாம்.

"சனிக்கிழமை வரட்டும், ஞாயிற்றுக் கிழமை வரட்டும், இல்லை, பண்டிகைக் கால லீவு வரட்டும்... குப்பையாகக் கிடக்கிற இந்த துணி, புத்தக அலுமாரிகளை அடுக்கி விடுகிறேன்... ஜன்னல்களைத் துடைத்து வீட்டை ஒழுங்குபடுத்தி விடுகிறேன்... ஒரு நாள் முழுக்க இந்த வேலைக்காக ஒதுக்கப் போகிறேன்..." என்றெல்லாம் சிலர் சபதம் எடுப்பர்.

சனிக்கிழமை வரும், ஞாயிற்றுக் கிழமையும் வரும் இவர் எதிர்பார்த்தது போல விடுமுறை நாட்களும் வந்து போகும்... ஆனால், கலைந்து கிடக்கும், அலுமாரிகளை சீர்படுத்த முடியாமல் வேறு வேலை ஏதாவது வந்து சேர்ந்து இருக்கும். கலைந்து கிடக்கும் அலுமாரி, மேசையெல்லாம் அதே நிலையில் தான் இருக்கும்.

ஒவ்வொரு நாளும் பத்து அல்லது 15 நிமிடங்கள் ஒதுக்குங்கள். ஒவ்வொரு தட்டாக அலுமாரியில் உள்ளவற்றை அடுக்கி வையுங்கள். சுலபமாக வேலையை முடிக்கலாம்! உங்கள் நேரடிப் பார்வையோ, உதவியோ, ஆலோசனையோ தேவையில்லாத - மற்றவர்களால் முடிக்கக் கூடிய வேலையில் உங்களை ஈடுபடுத்திக் கொண்டு நேரத்தை வீணாக்காதீர்கள்.

அறுவைக் கேஸ்கள் பலர் நம் நேரத்தை களவாட துடித்துக் கொண்டு வருவர். அவர்கள் மனமும் புண்படக் கூடாது, அவர் களிடமிருந்து தப்பிக்கவும் வேண்டும். இதற்கான வழிமுறைகளையும் கற்றுக்கொண்டால் நேரத்தை மிச்சம் பிடிக்கலாம்!


ஒரு அறுவை ஆசாமி உங்களைத் தேடி அலுவலகத்திற்கோ வீட்டிற்கோ வந்து விட்டதாகவே வைத்துக் கொள்ளுங்கள். அவரிடம், "இன்னும் பத்து நிமிடம் தாமதமாக வந்திருந்தால் என்னைப் பார்த்திருக்க முடியாது நீங்கள்... அவசர வேலையாக வெளியே புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்..." எனக் கூறலாம்! இதன் மூலம் பத்து நிமிடத்திற்கு மேல் உனக்காக என்னால் நேரம் ஒதுக்க முடியாது என்பதை நாசூக்காக புரிய வைத்துவிட முடியும்.

அந்த நபர் அதையும் புரிந்து கொள்ளவில்லை என்றால் ஒன்பதாவது நிமிடமே நீங்கள் கிளம்புவதற்கான அறிகுறிகளை காட்டி, ஆசாமியிடம், "சரி... பிறகு பார்க்கலாம்..." எனக் கூறி அனுப்பி வையுங்கள்!

இதே போல் டெலிபோனில் வரும் அறுவைகளை சமாளிக்க, அவர்கள் கூப்பிடும் போது, மற்றவரைவிட்டு ஏதாவது சமாளிப்பை கூறச் சொல்லுங்கள். பிறகு ஐந்து நிமிடம் சென்றபின் அவருக்கு நீங்களே போன் செய்யுங்கள். நீங்களே போன் செய்வதால் பேச்சைக் குறைத்து, நீங்கள் விரும்பும்போது போனை வைத்து விடலாம்!

---

# காற்றுக்கு எத்தனை பெயர்கள்!



**பழந் தமிழர்கள் காற்றினை வகைப்படுத்திய விதம். திசை மற்றும் வேகம் போன்றவற்றைக் கொண்டு காற்றின் வகைகள்.**

**(அ) திசை பொறுத்து காற்றின் பெயர்கள்:**

(1) தெற்கிலிருந்து வீசுவது தென்றல்காற்று

(2) வடக்கிலிருந்து வீசுவது வாடைக் காற்று

(3) கிழக்கிலிருந்து வீசுவது கொண்டல் காற்று

(4) மேற்கிலிருந்து வீசுவது மேலைக் காற்று

**(ஆ) காற்று வீசும் வேகம் பொறுத்து பெயர்கள்:**

(1) 6 கி.மீ வேகத்தில் வீசும் காற்று "மென்காற்று"

(2) 6-11 கி.மீ வேகத்தில் வீசும் காற்று "இளந்தென்றல்"

(3) 12-19 கி.மீ வேகத்தில் வீசும் காற்று "தென்றல்"

(4) 20-29 கி.மீ வேகத்தில் வீசும் காற்று "புழுதிக்காற்று"

(5) 30-39 கி.மீ வேகத்தில் வீசும் காற்று "ஆடிக்காற்று"

(6) 100கி.மீ வேகத்தில் வீசும் காற்று "கடுங்காற்று"

(7) 101 -120 கி.மீ வேகத்தில் வீசும் காற்று "புயற்காற்று"

(8) 120 கி.மீ மேல் வேகமாக வீசும் காற்று "சூறாவளிக் காற்று"

ரஜினியின் வரவிருக்கும் புதிய படம் "கோச்சடையான்". யார் இந்த "கோச்சடையான்"? இதோ அவனைப்பற்றிய சில தகவல்கள்..

# கோச்சடையான்

சங்கம் வைத்து நம் தமிழை காத்த மரபில் வந்த பாண்டிய மன்னன் தான் இந்த "கோச்சடையன் ரணதீரன்" கி.பி. 670 முதல் 710 வரை பாண்டிய நாட்டினை ஆட்சி செய்தவன். அரிகேசரியின் மகனான இவன் தனது தந்தை கி.பி. 670 ஆம் ஆண்டளவில் இறந்தபின்னர் அரியணை ஏறினான். கடல் போன்ற சேனையினை உடையவன் எனப்படுகிறான்.

ரணதீரன் கோச்சடையன் என அழைக்கப்பட்டான். செங்கோல் தென்னன், வானவன், செம்யன், மதுரகருநாடகன், கொங்கர்கோமான், மன்னர் மன்னன் போன்ற பல பட்டப் பெயர்களைக் கொண்டிருந்தான். இதற்குச் சான்றாக வேள்விக்குடிச் செப்பேடு இருப்பது குறிப்பிடத்தக்கது.

படையெடுத்துச் சென்ற இவன், முதலில் சேர நாட்டை வென்றான். பின்னர் சோழ நாடு, கொங்கு நாடு, கருநாடகம் அனைத்தினையும் வென்று அனைவரையும் கப்பம் கட்டுமாறு ஆணையிட்ட இவன் மருதூரில் நடைபெற்ற போரில் பொதிய மலைத் தலைவன் ஆய்வேளையும் மங்கலபுரத்தில் மாரதரையும் வெற்றி கொண்டவனாவான். சாளுக்கிய மன்னனான விக்கிரமாதித்தனுடன் போர் புரிந்து வெற்றி பெற்றுப் பட்டம் பெற்றான் ரணதீரன். இவ்வாறு வேள்விக்குடிச் செப்பேடும் கேந்தூர்க் கல்வெட்டும் கூறுகின்றன..

ரணதீரன் ஆட்சிக் காலத்தில் மதுரைக்கு வந்து அங்கு பாண்டியன் மகளை மணந்து, சோழ மன்னன் ஒருவனையும் சந்தித்தான். திருவாலவாய் இறைவனையும், திருப்பரங்குன்றப் பெருமானையும் பின் வணங்கினான் எனப் பெரிய புராணம் மற்றும் சுந்தரர் தேவாரமும் கூறுவதும் குறிப்பிடத்தக்கது. (பெரிய-கழறி-91-2) (சுந்தரர் தேவாரம் திருப்பரங்குன்றப் பதிகம் - பாட்டு-11).

இடைக்காலப் பாண்டியன் ரணதீரன் கி.பி. 710 ஆம் ஆண்டில் மரணமடைந்தான்.




# பிறர் அந்தரங்கம்



பிறர் எழுதும் கடிதங்களைப் படிப்பதில் முரளிக்கு ரொம்ப ஆர்வம். இது தவறான செயல் என்று பலரும் கண்டித்தார்கள். இருந்தாலும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது பிறர் கடிதங்களைப் படித்து வந்தான்.

அலுவலகத்தின் உணவு இடைவேளை. வெளியூரில் உள்ள தன் மனைவிக்கு சுப்பையா கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். அப்போது முரளி பைலைத் தேடுவதைப் போல சுப்பையாவின் பின்புறம் நின்று கடிதத்தைத் திருட்டுத்தனமாகப் படித்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று தேள் கொட்டியதைப் போல அந்த இடத்தைவிட்டு அவசரமாக நகர்ந்தான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த சுப்பையாவின் பக்கத்து இருக்கைக்காரரான சேகர், "சுப்பையா நீ எழுதிக்கொண்டிருந்த கடிதத்தைத் திருட்டுத்தனமாப் படித்துக்கொண்டிருந்த முரளி, திடீரென்று இந்த இடத்தைவிட்டுப் போய்விட்டான். ஏனென்று தெரியவில்லை"

"எனக்குத் தெரியும்" என்ற சுப்பையா, புன்முறுவலுடன் சொன்னார்:

"நான் என் மனைவிக்குக் கடிதம் எழுதியதை முரளி படிக்கிறான் என்று எனக்குத் தெரியும். உடனே இப்படி எழுதினேன். நான் கடிதம் எழுதிக் கொண்டிருப்பதை ஓர் அயோக்கியன், முட்டாள் இரகசியமாக படித்துக் கொண்டிருக்கிறான். எனவே முடித்துக் கொள்கிறேன் என்று எழுதினேன்"

# சரிடா! ஞானசம்பந்தம்!



பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் பார்வையற்றவர். ஆனால் அவரது மூளையின் அபார ஆற்றல் பார்வைப் பழுதைப் புறந்தள்ளிவிட்டது. தாம் பார்வையோடிருந்த காலங்களில் படித்த புத்தகங்களின் பக்க எண்ணைச் சொல்லும்போது வியப்பு ஏற்படும். கூட்டங்களில் அவர் அருகே உட்காருவேன். பேச்சையும் தாண்டி நடக்கும் செயல்கள் பற்றி விவரிப்பேன். ஆனால் விவரிப்பதற்கும் முன்பாக அவர் நடப்பவற்றை ஊகித்துவிடுவார்.

ஒருமுறை, "என்னப்பா, புத்தகம் வெளியிடப்படும்னு மைக்கில சொல்றாங்க. இவ்வளவு நாழி ஆகுது. கை தட்டலே கேக்கலையே. புத்தகக் கட்டின் மேல் ரிப்பனைப் பிரிக்கிறதுல சிக்கலா?" என்றார்.

எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. எப்படிக் கண்டுபிடித்தார் என்று. "ஆமாம்!" என்றேன். "நூல் வெளியீடு இல்லையா? நூல் இருக்குமிடத்தில் சிக்கல் இருக்கத்தானே இருக்கும்!" என்றார்!

தமிழ் நயம் நிறைந்த உரையாடல் அவருடையது. ஒரு கூட்டத்தில் அவர் அருகே அமர்ந்து சில விஷயங்களை விவரித்துக் கொண்டிருந்தேன். "என்ன இருந்தாலும் நான் திருதராஷ்டிரனை விடப் பாக்கியசாலி!" என்றார் திடீரென்று. "அவனுக்கு சஞ்சயன் தானே நடந்ததைச் சொன்னான். எனக்கு விளக்கம் கிருஷ்ணனிடமிருந்தே கிடைக்கிறதே!" என்றார். ரசித்துச் சிரித்தேன் நான்.

என் மகனுக்கு சுமார் பத்து வயது இருந்தபோது ஒருமுறை அ.ச.ஞா. அவனிடம் சொன்னார், "அடேய்! எண்பது வயசுக்கு மேல் வயசை ஒன்று, இரண்டு, மூன்று என்றுதான் கணக்கிட வேண்டும். எனக்கு இப்போது 83 வயசு என்றால் 3 வயசு என்று அர்த்தம். உனக்கு வயது 10. ஆகையால் நீ என்னைவிட 7 வயதுப் பெரியவர். நீ எனக்கு அண்ணா. நான் உனக்குத் தம்பி சரிதானா?" என்றார்.

என் மகன், "சரிதான்!" என்று ஒப்புக்கொண்டான். "அப்படியானால் உனக்கு ஒரு தம்பி இருந்தால் அவனிடம் எப்படிப் பேசுவாயோ அப்படித்தான் என்னிடம் இனி பேச வேண்டும்!" என்று நிபந்தனை விதித்தார் அ.ச.ஞா.

சற்று யோசித்த அவன் திடீரென்று, "சரிடா! ஞானசம்பந்தம்!" என்றான்! இதைக் கேட்டுக் கலகலவென்று சிரித்த அவர் அப்படியே என் மகனைத் தேடி வாரி அணைத்து முத்தமிட்டார்!


(**'சுவடுகள்' புத்தகத்தில் எழுத்தாளர் திருப்பூர் கிருஷ்ணன்**)

42,000 வருடத்திற்கு முன் இறந்து போன மம்மோத் எனப்படும் மிருகம்!


லியுபா என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஒரு மாத குட்டி மம்மோத், பூமி "ஐஸ் ஏஜ்" என்ற நிலையில் இருந்த போது வாழ்ந்த மிருகமாக கூறப்படுகின்றது.


ரஷ்யாவில் யமல் பெனின்சுலா என்ற இடத்தில் 2007ஆம் ஆண்டு இது கண்டெடுக்கப்பட்டது!

ஹொங்கொங்கில் IFC Mall என்ற இடத்தில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.




# பேசும் படங்கள்



வாரம் ஒரு கிராமம்




# தெய்வீக பதிகள் நிறைந்த விளைவேலி பதி


வயல் சார்ந்த நிலப்பரப்பும், தெங்கு, பலா, விளா, மா ஆகிய கனி வளங்கள் நிறைந்த கிராமம் விளைவேலி. சாவகச்சேரி நகரில் இருந்து 2மைல்கல் தொலைவில் விளைநிலம் – சார்ந்த கிராமமாகும்.இது மட்டுவில், நுணாவில்மேற்கு, கல்வயல் ஆகிய ஊர்களுக்கு இடையில் வளம் கொழிக்கும் பிரதேசமாகவும், கல்விமான்களும், விவசாயிகளும் வணிகப் பெருமக்கள் வாழும் பிரதேசமாகவும் மிளிர்கின்றது.

நடுவில் வயல், மேற்கே தொன்மையும் அருளும் நிரம்பிய மருதடி விநாயகர் ஆலயமும், தெற்கே அருள்தரும் துர்க்கை அம்மன் ஆலயமும், கிழக்கே – ஐயனார் கோவிலும் வடக்கே வைரவர் ஆலயமும் அமைந்துள்ளன.

இவ்வாலயங்களில் விளைநிலமாக – விளைவேலி வயல்பரப்பு அமைந்துள்ளது.



மருதடி பிள்ளையார் ஆலயம்




ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்

மேலும் நுணாவில் – கனகம்புளியடி பருத்தித்துறை வீதியும் மட்டுவில் பெருங்குளம் – கல்வயல் வீதியும், துர்க்கை அம்மன் வீதியும் இப்பகுதியில் பெருவீதிகளாக அமைந்து சாவகச்சேரி நகருடன் இணைப்பை ஏற்படுத்துகிறது. விளைவேலி அமைநதுள்ள மட்டுவில் தெற்கில் –மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம் கல்விக்கு அழகு சேர்க்கின்றது.

18ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட தொன்மை மிகுந்த விநாயகர் ஆலயமும் ஆலய முன்றலில் 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட மருதமரமும் இம்மருத நிழலில் வீற்றிருக்கும் விநாயகரும்தான் இவ் விளைவேலியின் சிறப்பாகும். பார்ப்போரை வியக்க வைக்கும் பருமனும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் அழகும் விநாயகனின் புகழை மேலோங்க வைக்கிறது. ஆலய அறங்காவலர் சபையோடு பிரதம குருக்கள் சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்களின் வழிநடத்தலில் இவ் விளைவேலி மக்கள் ஒன்றாக இணைகின்ற ஆலயமாகின்றது.

அத்தோடு தாளையம்பதி துர்க்கை அம்மன் ஆலயம் தெற்கே மிளிர் சேர்க்கின்றது. விளைவேலியில் பொது ஆலயமாக இது மிளிர்கின்றது. கிழக்கே ஹரிஹர புத்தர ஐயனார் ஆலயம் மிளிர்வதோடு, அருளுக்கு மெருகேற்றும் ஐயனின் புகழ்பரப்பும் இவ் ஆலயமானது சிவத்திரு. சு. சிவானந்தனினால் இவ்விளைவேலியின் மாண்புக்கு மேலும் மெருகூட்டும் வகையில் பல விழாக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கல்விக்கும், ஒழுக்கத்திற்கும் தலையாக விளங்கும் சந்திர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம் இவ் விளைவேலிக் கிராமத்தின் மூச்சாக தனது பணியை மேலும் ஆர்வத்தோடு கொண்டு செல்வது பெருமையே. மேலும் முன்பள்ளியின் உழைப்பால் சிறார்களின் வளர்ச்சி மேலோங்குவதோடு, வர்த்தகத்துறையிலும் முன்னிற்கின்றது. அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவு சங்க சிறப்பு அங்காடி இதற்கு சான்றாக அமைகின்றது.



காளி கோவில்



சோமஸ்கந்த முன்பள்ளி



ஐயனார் ஆலயம்




கோப்சிற்றி

# மீனவர் இளைப்பாற்று மண்டபங்கள் கிளிநொச்சியில் அமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2012ஆம் ஆண்டில் மீன்பிடி நீரியல் வளத்துறை திணைக் களத்தால் மீனவர் இளைப்பாற்று மண்டபங் கள் நான்கு அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள் ளது.

இதில் பூநகரி பரமன்கிராய் கடற்றொழிலா ளர் கூட்டுறவுச்சங்கத்தால் மீனவர் இளைப்பாற்ற மண்டபம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இச் சங்கம் இக்கட்டுமானத்தால் சேமிக்கப்பட்ட நிதி மூலம் கட்டடத்தைச் சுற்றி மதில் அமைக்கும் பணியை மேற்கொண்டுவருகிறது.

புலோப்பளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தமது சொந்த நிதியிலிருந்து காணியைக் கொள்வனவு செய்து மீனவர் இளைப்பாற்று மண்டபத்தை அமைத்து வருகிறது.

இதற்காக 2.1 மில்லியன் ரூபாவை செல விட்டு வருகிறது.

இதன் 70 வீதமான வேலைகள் முடிவடைந் துள்ளது.

பூநகரி நாச்சிக்குடா கடற்றொழிலாளர் கூட் டுறவுச் சங்கம் 2.4 மில்லியன் ரூபா செலவில் மீனவர் இளைப்பாற்று மண்டபத்தை அமைத்து வருகிறது. 50 வீதமான வேலைகள் தற்போது முடிவடைந்துள்ளது.

சென்ற வருடம் பூநகரி பிரதேசத்தில் கரு வாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க 2 இலட்சம் ரூபா செலவில் 50 பெண்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர்களுக்கு கருவாட்டு உற்பத்தி உபகரணங்களும் இலவ சமாக வழங்கப்பட்டன. (90)

## கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மையையும் வரலாற்றையும் ஆவணப்படுத்துவதற்கான ஆய்வு முயற்சிகள் - 2013

**கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மையையும் வரலாற்றையும் ஆவணப்படுத்தும் நோக்கில் புலமையாளர்களிடம் இருந்து ஆய்வுக்கட்டுரைகள் கோரப்படுகின்றன.**

*ஆய்வுக்கட்டுரைகள் பின்வரும் அம்சங்களினை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும்.*

வரலாறு, விவசாயம், வனம், குடியேற்றம், நீர்வளம், நிலவளம், பொருளாதாரம், வாழ்வியல், பண்பாடு, தொல்லியல், மரபுரிமை, இலக்கியம் (நாவல், சிறுகதை, கவிதை, நாடகம்), சமயம், கலைமுயற்சிகள் (சிற்பம், ஓவியம், நடனம், நாடகம், இசை), நாட்டார் வழக்காற்றியல் (ஊர்ப்பெயர்க்காரணம், மருவிவரும் வழக்காற்றுச் சொற்கள், பாரம்பரிய கூத்துக்கள்)

### நிபந்தனைகள்

1. ஆய்வுக்கட்டுரைகளை 20 வயதிற்கு மேற்பட்ட எவரும் சமர்ப்பிக்கலாம்.
2. ஆய்வுக்கட்டுரைகள் முற்றுமுழுதாக கிளிநொச்சி மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும்.
3. ஆய்வுக்கட்டுரையாளர் தனது கட்டுரையை ஆய்வரங்கத்தில் நேரில் சமர்ப்பிக்க கூடியதாக இருக்க வேண்டும்.
4. ஆய்வுக் கட்டுரைகள் ஏ4 தாளில் தட்டச்சு செய்யப்பட்ட 12-20 பக்கங்களில் உள்ளடங்க வேண்டும். மேலும் வன்பிரதியாகவும் மென்பிரதியாகவும் ஒப்படைத்தல் வேண்டும்.
5. விண்ணப்பபடிவங்கள் 31.01.2013இற்கு முன்னராகவும், கட்டுரைகள் எதிர்வரும் 28.02.2013 இற்கு முன்னராகவும் நேரிலோ தபால் மூலமோ, குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைய அனுப்பப்படவேண்டும்.
6. கட்டுரைகள் சுயமாக எழுதப்பட வேண்டும். உசாத்துணை நூல்கள் குறிப்பிடவேண்டும்.
7. கட்டுரைகள் இன முரண்பாட்டுத்தளங்களில் இருந்து விடுபட்டதாக இருத்தல் அவசியம்.
8. ஆய்வுக்கட்டுரைகளின் கருத்துக்கு அவரவரே பொறுப்பாவர்.
9. ஆய்வாளர் தமது சுயவிபரங்கள், ஆய்வுத் தலைப்பு உள்ளடங்கிய விண்ணப்பத்தினை ஆய்வுக் கட்டுரைக்கு முன் சமர்ப்பிக்கவேண்டும்.
10. ஆய்வுக்கட்டுரைகள் அனைத்திலும் அவசியமான திருத்தங்கள் செய்வதையும், ஆய்வரங்கத்தில் சமர்ப்பிப்பதையும், நூலில் வெளியிடுவதையும் ஆய்வுக்குழுவே தீர்மானிக்கும்.

---

**கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மையையும் வரலாற்றையும்**
**ஆவணப்படுத்துவதற்கான ஆய்வு முயற்சிகள் - 2013**
**ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தலுக்கான விண்ணப்பப்படிவம்**

1) விண்ணப்பதாரியின் முழுப்பெயர்: ..........................................

2) முகவரி :..........................................

3) தேசிய அடையாள அட்டை இலக்கம்:-..........................................

4) தொலைபேசி இலக்கம் :..........................................

5) தொழில்: :..........................................

6) கடமை அலுவலக முகவரி :..........................................

7) விண்ணப்பிக்கும் துறை :..........................................

8) ஆய்வுத் தலைப்பு :..........................................

மேலே என்னால் தரப்பட்ட விடயங்கள் யாவும் சரியானதும், உண்மையானதும் எனது சொந்த ஆய்வுக்கட்டுரை என்றும் வேறு எந்த நூலிலும் பிரசுரம் செய்யப்படவில்லை என்பதனையும் உறுதி செய்வதுடன், ஆய்வுக்கட்டுரையினை சமர்ப்பிப்பதற்கும் நூலில் பிரசுரம் செய்வதற்கும் அவசியமான மாற்றங்கள் செய்வதற்கும் ஆய்வுச் செயற்குழு தீர்மானத்தின் பிரகாரம் செயற்படுத்த சம்மதிக்கின்றேன்.

............................ திகதி

............................................ விண்ணப்பதாரியின் கையொப்பம்

ஊடக அனுசரணை தினமுரசு

## 2013 புத்தாண்டுப் பலன்கள்

### விருச்சிகம்

ஆன்மீகம் முதல் அறிவியல் வரை அனைத்தையும் அறிந்து வைத்திருக்கும் நீங்கள், நியாயத்தின் பக்கம் நிற்பீர்கள். மற்றவர்களை வழி நடத்துவதில் வல்லவர்கள். உங்களின் 9ஆவது ராசியில் இந்தாண்டு பிறப்பதால் பணவரவு உயரும். எதிர்ப்புகள் அகலும். ஓயாமல் உழைப்பீர்கள். முகப்பொலிவு, ஆரோக்கியம் கூடும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். வாகனத்தை மாற்றுவீர்கள். பூர்வீகச் சொத்தை சீர்செய்வீர்கள். உறவினர் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். எதிர்பார்த்த பணம் வரும்.

வருடம் ஆரம்பிக்கும்போது செவ்வாய் 3ஆம் வீட்டிலேயே அமர்ந்திருப்பதால் புதிதாக வீடு, மனை வாங்குவது, விற்பது லாபகரமாக முடியும். பழைய வாகனத்தை மாற்றிவிட்டு புதியது வாங்குவீர்கள். மகனின் கல்யாணத்தை சிறப்பாக நடத்தி முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் எல்லோரும் உங்களை மதிப்பார்கள். எதிர்த்துப் பேசியவர்கள், வலியவந்து நட்பு பாராட்டுவார்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு பக்கபலமாக இருப்பார்கள்.

சுக்கிரன் உங்கள் ராசிக்குள் நிற்கும்போது இந்தாண்டு பிறப்பதால் அடிப்படை வசதிகள் பெருகும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். கடனாகக் கொடுத்த பணம் கைக்கு வரும். பிள்ளைகளை கூடாப்பழக்க வழக்கங்களிலிருந்து மீட்பீர்கள். வாழ்க்கைத் துணை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சரும நமைச்சல் நீங்கும். சிலர் வீட்டை புதுப்பித்துக் கட்டுவீர்கள். மனஸ்தாபங்களால் ஒதுங்கியிருந்த உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். வேலை தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு நல்ல வேலையும் கிடைக்கும்.

ராசிக்கு 6ஆம் வீட்டில் கேது சாதகமாக இருப்பதால் சூழ்ச்சிகளை முறியடித்து வெற்றி பெறுவீர்கள். பெரிய பதவிகள் தேடிவரும். வசதிகள் நிறைந்த வீட்டிற்கு குடிபுகுவீர்கள். அரைகுறையாக நின்றுபோன பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஊரில் செல்வாக்கு கூடும். வெளிநாடு சென்று வருவீர்கள். வேற்று மொழி பேசுபவர்களால் ஆதாயம் உண்டாகும். ராகு 12ஆம் வீட்டில் மறைந்திருப்பதால் மறைமுக லாபம் உண்டு.

எதிர்மறை எண்ணங்கள் தோன்றும். திடீர் பயணங்களும் அலைச்சல்களும் அதிகரிக்கும். நெருங்கியவர்கள் சிலர் நீங்கள் ஒன்று சொல்ல அதை வேறு விதமாக நினைத்துக் கொண்டு உங்களை குறைகூறுவார்கள். மே 28ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 7ஆம் வீட்டில் குரு அமர்ந்திருப்பதால் வரவேண்டிய பணம் கைக்கு வரும். கல்வியாளர்கள், அறிஞர்களின் நட்பு கிடைக்கும். பொது விழாக்கள், சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதை கிடைக்கும். உறவினர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பழைய சிக்கல்களை பேசித் தீர்ப்பீர்கள்.

கணவன்-மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். குழந்தை இன்றித் தவித்த பெற்றோருக்கு வாரிசு உருவாகும். பிள்ளைகளால் சமூகத்தில் உங்கள் அந்தஸ்து உயரும். தள்ளிப்போன கல்யாணப் பேச்சுவார்த்தை கூடி வரும். ஆனால் மே 29ஆம் திகதி முதல் குரு பகவான் 8ஆம் வீட்டில் மறைவதால் கணவன்-மனைவிக்குள் வீண் சந்தேகம் வரும். திடீர் செலவுகள் வந்துபோகும். அநாவசியப் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத பயணங்களும், அலைச்சல்களும் வந்துபோகும்.

சனிபகவான் ராசிக்கு 12ஆம் வீட்டில் ஏழரைச் சனியின் ஒரு பகுதியான விரயச் சனி தொடர்வதால் வருங்காலத்தைப் பற்றிய பயம் வந்து நீங்கும். எல்லோருக்கும் நல்லது செய்தும் கெட்ட பெயர் தான் மிஞ்சும். இரவு நேரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது. வாகனங்களில் கவனம் தேவை. மேலதிகாரிகளுடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். நண்பர், உறவினர் சிலர் உங்களை தவறான போக்கிற்கு தூண்டுவார்கள். இரத்த அழுத்தம், சளித் தொந்தரவு, இனந்தெரியாத கவலைகள் வந்துபோகும்.

கன்னிப் பெண்களே! விரக்தி, ஏமாற்றங்களிலிருந்து மீள்வீர்கள். விடுபட்ட பாடத்தில் வெற்றி பெறுவீர்கள். நல்ல வேலை அமையும். நீண்டகால போராட்டத்திற்கு பிறகு நினைத்தவரையே கல்யாணம் முடிப்பீர்கள். மாணவர்களே! பல பாடங்களில் சிவப்பு கோடிடும் அளவிற்கு மதிப்பெண் குறைந்ததே! இனி சக மாணவர்களைக் காட்டிலும் அதிக மதிப்பெண் பெறவேண்டுமென்ற வைராக்கியத்துடன் படிப்பீர்கள். வெற்றி நிச்சயம்.

அரசியல்வாதிகளே! அதிகாரிகளே! உங்களைப் பற்றிய வதந்திகள் நீங்கும். இழந்த பதவியை மீண்டும் பெறுவீர்கள்.

வியாபாரிகளே! தொலைநோக்குச் சிந்தனையுடன் முதலீடு செய்து லாபம் பார்ப்பீர்கள். கடையை வேறிடத்திற்கு மாற்றுவீர்கள். வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். தளபாடங்கள், ஹோட்டல், ஏற்றுமதி-இறக்குமதி, சில்லறைப் பொருட்களால் ஆதாயமடைவீர்கள்.

கலைஞர்களே! பட்டிதொட்டியெங்கும் உங்கள் படைப்புகள் பாராட்டு பெறும்.

விவசாயிகளே! வாய்க்கால், வரப்புச் சண்டையெல்லாம் ஓயும். உங்கள் வருமானத்தை உயர்த்தும்படி மாற்றுப்பயிர் செய்வீர்கள். வங்கிக் கடனுதவி கிடைக்கும். சின்னச் சின்ன சிக்கல்கள், சுகவீனங்கள் இருந்தாலும் பெரிய சாதனைகளை படைக்கத் தூண்டும் வருடமிது.

(தொடரும்...)

# பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது வழக்கு

## — லக்ஸ்மன் கிரியல்ல



(கொழும்பு)

குற்றவியல் பிரேரணை தொடர்பில் நாடாளுமன்றில் நடைபெறும் வாக்கெடுப்பின் போது அதற்கு ஆதரவாக வாக்களிக்கும் உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

அரசியல் அமைப்பிற்கு விரோதமான முறையில் வாக்களிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நடாளுமன்றத் தெரிவுக் குழு நடவடிக்கைகளை உச்ச நீதிமன்றம் இரத்துச் செய்துள்ளது.

இதனால் இந்தத் தெரிவுக் குழு அறிக்கைக்கு ஆதரவாக வாக்களிப்பது அரசியல் அமைப்பிற்கு முரணானது.

ஆளும் கட்சியில் இணைந்து கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அரசியல் அமைப்பிற்கு முரணான வகையில் வாக்களிக்கக் கூடாது என எழுத்து மூல கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குற்றவியல் பிரேரணைக்கு ஆதரவாக கையொப்பமிட்ட மற்றும் ஆதரவாக வாக்களிக்கும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவும் வழக்குத் தொடரப்படும் என லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

# பிரதம நீதியரசருக்கு எதிரான பிரேரணை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிராகரிக்க வேண்டும்

## சர்வதேச நீதிபதிகள் சங்கம்




(கொழும்பு)

இலங்கையில் பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணையை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிராகரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச நீதிபதிகளுக்கான சங்கம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை இலங்கையின் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதன் பின்னர் இதன் மீதான வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இந்த நிலையில் குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அது இலங்கையின் சட்ட ஒழுங்குக்கு பாரிய பாதிப்பை கொண்டு வரும் என்றும் சர்வதேச நீதிபதிகள் சங்கம் எச்சரித்துள்ளது. இது தொடர்பில் சர்வதேச நீதிபதிகள் சங்கம் 150 பக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இதில் இலங்கையில் நீதித்துறைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

# சட்டக்கல்லூரி விவகாரங்களில் தலையீடு செய்ய முடியாது

## — ரவூப் ஹக்கீம் —



(கொழும்பு).


சட்டக் கல்லூரி விவகாரங்களில் தலையீடு செய்ய முடியாது என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சட்டக் கல்லூரி நுழைவு தேர்வில் 78 முஸ்லிம் மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இதனால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. நுழைவுத் தேர்வில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் இந்தப் பிரச்சினையில் தலையீடு செய்ய முடியாது. சட்டக்கல்லூரி பரீட்சை விவகாரங்களில் நீதி அமைச்சு தலையீடு செய்வதில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வு தொடர்பில் நாடாளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# நேர்மையான விசாரணை நடத்தாது தெரிவுக்குழு அறிக்கை தயாரிப்பு



(கொழும்பு)

நேர்மையான விசாரணைகள் நடத்தப்படக் கூடாது என்ற காரணத்தினாலேயே அவசரமாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கை தயாரிக்கப்பட்டது என ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்ததனைத் தொடர்ந்து, அவசர அவசரமாக ஒரே இரவில் ஆளும் கட்சியினர் அறிக்கை தயாரித்தனர் என்று ஜே.வி.பி.பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஓரளவிற்கேனும் நிலவி வந்த ஜனநாயகத்தையும் குழி தோண்டி புதைக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது.

ஜனநாயக விரோத செயற்பாடுகளை அரசாங்கம் நியாயப்படுத்த முயற்சிக்கின்றது.

அரசாங்கம் தனக்கு எதிரான சகல சக்திகளையும் விடயங்களையும் ஒடுக்கி ஆட்சி நடாத்த முயற்சிக்கின்றது.

நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் சிலவே குற்றவியல் பிரேரணை முன்வைப்பதற்கு ஏதுவாக அமைந்தது என்பது வெளிப்படையானது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைகளின் போது பிரதம நீதியரசரை அவமரியாதை செய்து அவரை வெளிநடப்புச் செய்யச் செய்தனர்.

மக்களின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் காட்டாத தீவிரத்தை பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பில் அரசாங்கம் காட்டி வருகின்றது என ரில்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

# இராணுவ ஆசிரியர்கள் நியமனம்; தெற்கில் அவ்வாறு செய்ய முடியாதா?

## — சுரேஷ் பிரேமச்சந்திரன் —

(கொழும்பு)

வடக்கில் தமிழ் மொழிமூல இராணுவ ஆசிரியர்களை நியமிக்க முடியுமென்றால் ஏன் தெற்கில் இராணுவ ஆசிரியர்களை நியமிக்க முடியாதென கேள்ளவியெழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வடக்கிற்கு ஒரு சட்டம் தெற்கிற்கு வேறொரு சட்டமா எனவும் கேள்வியெழுப்பினார்.

அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்தும் கூட்டமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே சுரேஷ் பிரமேச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டிலுள்ள சிங்கள பாடசாலைகளில் 17ஆயிரம் ஆங்கில பாட ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுவதாகவும் வடக்கில் இராணுவத்திற்கு பயிற்சியளித்து



சிங்களம், கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களை கற்பிக்க முடியுமென்றால் ஏன் நாட்டிலுள்ள 2இலட்சம் இராணுவத்திற்கும் பயிற்சியளித்து அவர்களுக்கு ஏன் தென்பகுதியிலுள்ள பாடசாலைகளில் கற்பிக்க முடியாது.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் திவிநெகும சட்டமூலம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாகாணசபைகளிலுள்ள 15 அதிகாரங்களையும் அரசாங்கம் ஒரு அமைச்சின் கீழ் கொண்டு வந்து ஆட்சிசெய்ய நினைக்கின்றது. மாகாணசபைக்கு உரித்தான அதிகாரங்கள் தற்போது அதற்கு இல்லை. அனைத்தையும் அரசு கையகப்படுத்தியுள்ளது. பிரதம நீதியரசர் மீதான நாடாளுமன்ற வாக்கெடுப்பு நாடாளுமன்ற தெரிவுக்குழு செல்லுபடியற்றது என ஏற்கனவே உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது இந்நிலையில், அரசாங்கம் அதனை தட்டிக்கழித்து தன்னால் எதை அதிக பட்சமாக செய்யமுடியுமோ அதை செய்து ஒரு நெருக்கடியை ஏற்படுத்துவதே அரசின் நோக்கமாகும் எனத் தெரிவித்தார்.

# வழங்கப்பட்ட பதவிகளை இரத்துச்செய்வதாக அறிவிப்பு



(கொழும்பு)

தம்மால் வழங்கப்பட்ட பதவிகளை இரத்துச் செய்வதாக அமைச்சர் மேர்வின் சில்வா அறிவித்துள்ளார். ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

அரசியல் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் நோக்கில் கம்பாக மாவட்ட தேர்தல் தொகுதியின் அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு விசேட பதவிகள் வழங்கியிருந்தேன்.

இதற்கான விசேட அடையாள அட்டைகளையும் விநியோகித்திருந்தேன். எனினும், இந்த அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி சிலர் எனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்துகின்றனர்.

இணைப்புச் செயலாளர், இணைப்பாளர் மற்றும் ஆலோசகர் போன்ற பதவிகள் வழங்கப்பட்டிருந்தன. கடந்த 9ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த சகல பதவிகளையும் இரத்துச் செய்ய தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். விநியோகம் செய்யப்பட்ட விசேட அடையாள அட்டைகளை பொதுமக்கள் தொடர்பு அமைச்சில் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

# கைதான போலி மருத்துவர்; வெளியாகும் திடுக்கிடும் தகவல்

(கொழும்பு)

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலையில் அண்மையில் கைதான போலி மருத்துவரைப் பற்றி பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளன. மேற்படி போலி மருத்துவரான அஜித்குமார் என்பவர் பல இளம் பெண்களுக்கு கருத்தடை செய் துள்ளதுடன் பெண்களுக்கான பிரசவ மருத்துவமும் செய்துள்ளார்.

இந்தப் போலி மருந்துவருக்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமைபுரியும் இரு மருத்துவர்கள் உதவியாக இருந்துள்ளதுடன், தங்களின் மருத்துவ உபகரணங்களையும் போலி மருத்துவம் செய்வதற்காக வழங்கியுள்ளனர்.

மேலும் இந்தப் போலி வைத்தியர் படித்த இளைஞர், யுவதிகளுக்கு வேலை பெற்றுத் தருவதாகக் கூறி பல மில்லியன் ரூபாய்களை பெற்றுக்கொண்டு ஏமாற்றியுள்ளதாகவும், இந்தப் பணத்தைக் கொண்டு ஐரோப்பிய நாடொன்றிற்கு தப்பிச் செல்லத் திட்டமிட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

# 40 இலட்சம் ரூபா மோசடி; குற்றச்சாட்டில் இருவர் கைது

(கொழும்பு)

யாழ். வியாபாரியொருவரை ஏமாற்றி 40 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் கைதான சந்தேக நபர் இருவரையும் எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் பிரதான மாஜிஸ்திரேட்டும் மேலதிக மாவட்ட நீதவானுமானருவன்னிகா மாரப்பன உத்தரவிட்டார்.

அநுராதபுரம் ஷிதோகம பகுதியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த பஸ் உரிமையாளர் ஒருவருக்கு பராக்கிரமபாகுவின் முகத்தை ஒத்த உலோகத் தட்டை தங்கம் எனக் கொடுத்து 40 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளனர். வியாபாரி அதனைப் பரிசோதித்த பின்வு அவை போலி எனத்தெரிய வந்ததையடுத்து இதுதொடர்பாக அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

**கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து சரியான விடை எழுதுக.**

கொழும்பு பாரதி கல்லூரியிலிருந்து பேருந்து வண்டி கண்டியை நோக்கிப் புறப்பட்டது. எம்மில் பலர் இதற்கு முன்பு கண்டிக்குச் சென்றதே இல்லை. மலைகள், மகாவலிகங்கை, பேராதனைப் பூங்கா, பல்கலைக்கழகம், தலதாமாளிகை, தேயிலைத் தோட்டங்கள் பலவற்றைப் பார்வையிடும் எண்ணம் எம்மனதில் அலைமோதின.

36. எங்கிருந்து பேருந்து வண்டி புறப்பட்டது?

..........................................................................................

37. பேருந்து வண்டி எவ்விடத்தை நோக்கிச் சென்றது?

..........................................................................................

..........................................................................................

**பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

38 Milk ........................................    39. Teeth ........................................

40. Televison ........................................    41. November ........................................

**பின்வரும் சிங்களச் சொல்லை தமிழில் தருக.**

42. சிஸ்யா ........................................    மம ........................................

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

43. கடிகாரமொன்றின் நிமிடமுள் 2 இலும், மணிமுள் 12 இலும் நின்றால் என்ன நேரம்?
 1. 2 மணி    2. 12 மணி    3. 12 மணி 10 நிமிடம்

44. நீளத்தை அளப்பதற்குப் பயன்படுத்தக்கூடியது
 1. நிறுத்தற் கடிகாரம்    2. அளவுநாடா    3. விற்றராசு

45 தார் வீதியில் செல்லக்கூடியது?
 1. ஓடம்    2. புகைவண்டி    3. சைக்கிள் வண்டி


46. தாவரங்களில் பூச்சிகளைக் கவரத்தக்க பகுதி
 1. நிறஇலை    2. பூ    3. பழம்

47. 12 வயதுடைய ஒருவரை அவதானிக்கத்தக்க இடம் எது?
 1. பாடசாலை    2. அலுவலகம்    3. தியேட்டர்


48. பார்வை தெரியாத ஒருவரை அடையாளம் காண்பதற்கு உதவுவது
 1. வெள்ளைப் பிரம்பு    2. வெள்ளை உடை    3. கறுப்புக் கண்ணாடி

49. வைத்தியருடன் தொடர்புடையவர்
 1. தாதி    2. ஆசிரியர்    3. நோயாளி

**பின்வரும் உருக்களை அவதானித்து, இந்த உருக்களின் பயன்பாடு பற்றி புள்ளிக் கோட்டில் எழுதுக.**



உரு - 1



உரு - 2

50. உரு - 1 : ..........................................................................................

51. உரு - 2 : ..........................................................................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
வெளியீடு 2 மணி

# கல்வி முரசு 27



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

பொறுமையின் சிகரமாம் பூமாதேவியை கௌவி மூடிக்கொண்டிருந்த காரிருளானது மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருக்கிறது. வானின் உச்சியிலே பளபளவென்று வைரங்களை வாரி இறைத்தது போல பிரகாசித்துக் கொண்டிருந்த சின்னஞ்சிறு விண்மீன்களின் வண்ண ஒளி படிப்படியாகக் குறையத் தொடங்குகிறது. கிழக்கு வானம் செக்கச் சிவந்து பிரகாசித்த வண்ணம் இருக்கிறது. ஆதவன் தனது பொன்மயமான அழகிய ஒளிக்கதிர்களைப் பூமாதேவியின் மீது மெல்ல மெல்லப் பரவிடுகின்றான். தொடர்ந்து கீழ் வானில் பஞ்சு போன்ற முகில் கூட்டங்களுக்கு மத்தியிலே தங்கத் தகட்டைப் போன்று கதிரவன் மேலே எழத் தொடங்குகின்றான். தாமரை மலர்கள் தம் தலைவனின் வருகை கண்டு தலைநிமிர்ந்து முகமலர்ந்து, மொட்டவிழ்ந்து உவகையுடன் வரவேற்கின்றன. அங்கும் இங்கும் மக்களின் நடமாட்டம் தென்படுகிறது. பறவைகளின் குதூகலமான இனிய நாதங்கள் வானில் பரவுகின்றன. ஆலயங்களில் மணியோசை மக்களை அகங்குளிரச் செய்கின்றன. வெள்ளைப் புறாக்களைப் போன்று பாடசாலைச் சிறார்கள். ஆகா!............என்ன இனிய காட்சி.

01. "வானம்" என்பதற்கு ஒத்த சொல் தருக.

..........................................................................................

02. இருக்கிறது என்பதை இறந்த காலத்தில் எழுதுக.

..........................................................................................

03. பந்தியில் காணப்படும் அடுக்கு மொழிச் சொல் ஒன்றினை எழுதுக.

..........................................................................................

04. மணியோசை என்பதைப் பிரித்து எழுதுக.

..........................................................................................

05. "அங்கும் இங்கும் மக்களின் நடமாட்டம் தென்படுகிறது" இவ் வாக்கியத்தின் எழுவாய் எழுதுக.

..........................................................................................

06. உவகை என்பதற்கு எதிர்ச்சொல் தருக.

..........................................................................................

07. பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துடைய சொல் தருக.
 1) விண்மீன் ..........................................................................................
 2) ஆதவன் ..........................................................................................

08. 1) பந்தியில் காணப்படும் இணைமொழிச் சொல் ஒன்றினை எழுதுக.

..........................................................................................

 2) அடுக்கிடுக்குத் தொடர்ச் சொல் ஒன்றை எழுதுக.

..........................................................................................

09. பின்வரும் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.
 1) மலர் ........................................    2) பாடசாலை ........................................

10. மேலே உள்ள பந்தியில் இரட்டை மொழியினை எழுதுக.

..........................................................................................

**சுருக்கமான விடை தருக.**

11. உணவு சமைக்கப் பயன்படும் பூக்கள் இரண்டு தருக.
 1) ........................ 2) ........................
12. தாவர உண்ணிகள் இரண்டு தருக.
 1) ........................ 2) ........................
13. தச்சுத் தொழிலாளி பயன்படுத்தும் இரண்டு உபகரணங்கள் தருக.
 1) ........................ 2) ........................
14. தோற்கருவிகள் இரண்டு தருக.
 1) ........................ 2) ........................
15. மாப்பொருள் உணவுகள் இரண்டு தருக.
 1) ........................ 2) ........................
16. பூரணமான உணவுகள் இரண்டு தருக.
 1) ........................ 2) ........................
17. இலங்கையின் தேசியக் கொடியின் நிறங்கள் இரண்டு தருக.
 1) ........................ 2) ........................

**பின்வரும் பந்தியை வாசித்து அதைத் தொடர்ந்து நடைபெறும் நிகழ்வு பற்றித் தொடர்ந்து எழுதுக.**


18. அன்று வழமைபோல் ஆதவனும் கீழ் வானில் மலர்ந்துவிட்டான். என்றும் போல சகல விடயங்களும் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. எமது வீடு அமைந்திருந்தது கடற்கரைப் பிரதேசம் என்பதால் கடலலையின் ஓசை வழமைபோல் கேட்ட வண்ணம் இருந்தது. நான் மேசையில் அமர்ந்து எனது பாடங்களைப் படித்துக்கொண்டிருந்தேன். வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பிய எனது தந்தை வேகமாக வந்தார். வந்ததும் இன்றைக்கு நான் கடலைப் பார்த்தேன். கடலில் ஏதோ ஒரு வித்தியாசம் தெரிகிறது என்று சொல்லி முடிப்பதற்குள் அலையின் பேரொலியும், ஏதோ வெடித்த சத்தமும் எம்மை அதிரவைத்தது. உடனே நானும் எனது பெற்றோரும் பதற்றத்துடன் வெளியே ஓடி வந்தோம். என்ன அமைதியாக இருந்த கடல் அன்னை பொங்கியெழுந்து கொண்டிருந்தாள். சற்று நேரத்தில் பொங்கி வந்த கடல் அன்னை திடீரென்று தன்னை உள்வாங்கிவிட்டாள். என்ன! ஆச்சரியம் ........................ கடலும் பாறைகளும் படிந்த தரையாகக் காட்சியளித்தது. ஆனால் கண்ணிமைப்பதற்குள்ளே ........................


இதனைத் தொடர்ந்து நடந்தவற்றை விபரிக்கும் வகையில் ஆறு வாக்கியங்கள் எழுதுக.

........................................................
........................................................
........................................................
........................................................
........................................................
........................................................


(ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெற்றிருக்க வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு திருத்தமானதாக இருத்தல் வேண்டும்.)

**கீழ்வரும் படங்களின் சரியான தமிழ்ச் சொல்லை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

19.  ........................

20.  ........................

21.  ........................

22.  ........................



**பின்வரும் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமானதாக ஒவ்வொன்றின் கீழேயுள்ள நான்கு சொற்களில் ஒரு சொல் அமையும். அச்சொல்லின் கீழ்க் கோடிடுக.**

23. புண்ணிய தலங்களுக்குச் செல்லும் பயணம்
 1) பிரயாணம் 2) யாத்திரை 3) சுற்றுலா 4) நடைபவனி
24. போட்டி நிகழ்ச்சிகளில் சரி பிழை கூறுபவர்
 1) அதிபர் 2) நடுவர் 3) மத்தியாளர் 4) சட்டம்பியார்
25. துணியினால் தலையிலே அழகாகக் கட்டப்படுவது
 1) தொப்பி 2) தலைப்பாகை 3) தலப்பா 4) முட்டாக்கு
26. குற்றவாளிகள் தண்டனை அனுபவிக்கும் இடம்
 1) மனை 2) குடிசை 3) குகை 4) சிறை
27. பல துறைகளிலும் உயர்கல்வி பெறும் இடம்
 1) ஆச்சிரமம் 2) பல்கலைக்கழகம் 3) கல்லூரி 4) மடைப்பள்ளி

28. ஒரு பையினுள் இலக்கம் 2 உம், 4 உம் 16 உள்ளன. இந்த இலக்கங்களின் கூட்டுத்தொகை 56 ஆகும். எனவே பையிலுள்ள இலக்கம் 2 எத்தனை?
 1) 4 2) 8 3) 16

29) கொழும்பு பண்டாரநாயக்க விமான நிலையத்திலிருந்து அதிகாலை 4.30 மணிக்குப் புறப்பட்டுச் சென்ற ஆகாய விமானம் 2 மணித்தியாலம் 35 நிமிடப் பயணத்தின் பின் தாய்லாந்தை வந்தடைந்தது. இலங்கை நேரப்படி விமானம் தாய்லாந்தை சென்றடைந்த நேரம் என்ன?
 1) மு.ப. 6.50 2) மு.ப.6.55 3) மு.ப.7.05

30) ஒரு பேனாவையும், அழிறப்பரையும் ரூபா 23.00 க்கு வாங்கினேன். அழிறப்பரைவிட பேனாவின் விலை ரூபா 7.00 அதிகமாகும். அழிறப்பரின் விலை என்ன?
 1) ரூபா 7.00 2) ரூபா 8.00 3) ரூபா 9.00

31) 2008 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி திங்கட்கிழமை எனில், மார்ச் மாதம் 1 ஆம் திகதி என்ன கிழமை?
 1) திங்கள் 2) செவ்வாய் 3) புதன்

32) 36 Kg சீனி மூடையிலிருந்து 4 kg 350g சீனி விற்கப்பட்டால், மூடையில் மீதியாகவுள்ள சீனியின் நிறை எவ்வளவு?
........................................................

33) காலை 10.00 மணிக்கு குறிக்கப்பட்டிருந்த பேருந்து ஒன்று 20 நிமிடங்களின் பின்னர் பயணத்தை ஆரம்பித்தது. அப்பயணத்திற்கு 4 மணித்தியாலம் 45 நிமிடங்கள் எடுத்தது. பேருந்து பயணத்தை பூர்த்தி செய்த நேரம் என்ன?
........................................................

34) ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு இரண்டுவேளை உணவாக நான்கு விசுக்கோத்துக்கள் வீதம் வழங்கப்படுகின்றது. 128 விசுக்கோத்துக்கள் அடங்கிய பைக்கெற்று எத்தனை தினத்திற்குப் போதும்?
........................................................

35) குறிக்கப்பட்ட நேரத்திலிருந்து 35 நிமிடங்களின் பின்னர் புறப்பட்ட மகிழூர்ந்து ஒன்று பிற்பகல் 3.45 இற்கு பயணத்தை நிறுத்தியது. மகிழூர்ந்து பயணத்திற்காக 8 மணி 15 நிமிடங்கள் எடுத்திருப்பின் புறப்பட்ட நேரம் யாது?
........................................................

# பாகிஸ்தான் துப்பாக்கிச்சூட்டின் எதிரொலி

# இரு நாடுகளின் உறவில் மீண்டும் விரிசல்



(சென்னை)

பாகிஸ்தான் நடத்திய துப்பாக்கிச்சூட்டிற்கு இந்திய வீரர்கள் பலியானதையடுத்து இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் மீண்டும் விரிசல் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

காஷ்மீரில் எல்லைக் கோட்டுப் பகுதிக்கு அருகே கடந்த திங்களன்று ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய இராணுவத்தினர் மீது பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தியதில், ஹேமராஜ் மற்றும் சுதாகர் சிங் என்னும் இரு வீரர்கள் உயிரிழந்தனர்.

அவர்களின் தலையை பாகிஸ்தான் வீரர்கள் கொடூரமாக துண்டித்ததாகவும் தகவல் வெளியானது.

இந்நிலையில், பாகிஸ்தான் தூதர் சல்மான் பீஷரை நேரில் வரவழைத்த வெளியுறவு அமைச்சகம், அவரிடம் இந்தியாவின் கடும் கண்டனத்தை தெரிவித்தது.

இந்திய வீரர்களின் உடல்கள் நடத்தப்பட்ட விதம் மிகவும் கவலையளிக்கிறது. இது மிகவும் வேதனையளிக்கிறது. இது போன்ற செயல்களை ஏற்றுக் கொள்ள முடியாது என பாகிஸ்தானிடம் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது என வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

ஆனால், இந்தியாவின் குற்றச்சாட்டை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஹினா ரபானி மறுத்துள்ளார்.

இது தொடர்பாக ஐ.நா. கண்காணிப்பாளர்கள் விசாரணை மேற்கொண்டால் அதற்கு ஒத்துழைக்கத் தயார் என்றும் தெரிவித்தார். பாகிஸ்தான் இராணுவத்தின் செயலால் இரு நாடுகளின் உறவு மீண்டும் சீர்குலையும் நிலை உருவாகியுள்ளது.

சமீபத்தில் நல்லெண்ண நடவடிக்கையாக பாகிஸ்தானியர்களுக்கு விசா நடைமுறைகளை இந்தியா எளிதாக்கியது. தற்போது இரண்டு இராணுவ வீரர்களுக்கு நேர்ந்த கொடூரத்தால் அந்த முடிவு மறு பரிசீலனை செய்யப்படலாம் என கூறப்படுகிறது.

### இந்தியச் செய்திகள்



கொச்சி வந்த மொரிஷியஸ் அதிபர் ராஜ்கேஷ்வர் புர்யாக்கிற்கு நினைவு பரிசு வழங்கினார் கேரள முதல்வர் உம்மன் சாண்டி.

# லொறி விபத்து 25 பேர் பலி



பீகாரில் அறுவடைக்காக வேலை ஆட்களை லொறி ஏற்றிச்சென்றபோது ஏற்பட்ட விபத்தில் 25 பேர் பலியாகிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பீகாரின் அவுரங்காபாத் மாவட்டத்தில் உள்ள டிடைய் பிகா கிராமத்தில் அதிக வேகமாக வந்த லொறி வளைவில் திரும்பிய போது அருகில் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் சுமார் 25 பேர் பலியாகி உள்ளனர். மேலும் 10 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

அவுரங்காபாத்தில் இருந்து அறுவடைக்காக வேலை ஆட்களை 35 பேரை ஏற்றி வந்த போது இவ்விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பிரமோஸ் ஏவுகணை வெற்றிகரமாக சோதனை!




(விசாகப்பட்டினம்)

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் இந்தியாவின் கடற்படை தளம் அமைந்துள்ளது. இந்த கடற்படை தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கப்பலில் இருந்து நேற்று காலை 9.30 மணியளவில் பிரமோஸ் வகை ஏவுகணை சோதனை நடத்தப்பட்டது. 290 கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கும் இந்த சூப்பர் சோனிக் ஏவுகணை, எதிரி ஏவுகணைகளை ஏமாற்றி தனது நிலையை மாற்றிச் சென்று தாக்கக்கூடிய வல்லமை பெற்றதாகும். இந்த ஏவுகணை அமெரிக்க மற்றும் ரஷ்ய விண்வெளி தொழில்நுட்பத்தகவல்களை பெறக்கூடிய திறமை பெற்றதாகும். கடல் மட்டத்தில் இருந்து ஒரு மீற்றர் உயரத்தில் உள்ள சிறிய இலக்கைக்கூட மிகதுல்லியமாக தாக்கி அழிக்கக் கூடிய வல்லமை பெற்றது. பிரமோஸ் வகை ஏவுகணை 2005ஆம் ஆண்டு இந்தியக் கடற்படையில் சேர்க்கப்பட்டது. நேற்று ஏவப்பட்ட இந்த ஏவுகணை 34ஆவது பிரமோஸ் வகை ஏவுகணை என்று சொல்லப்படுகிறது.

# சின்மயி கொடுத்த வழக்கை இரத்துச் செய்யக்கோரி மனு



(சென்னை)

பின்னணிப் பாடகி சின்மயி அளித்த புகாரின் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கை இரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவுக்கு இரண்டு வாரங்களில் பதிலளிக்கும்படி சைபர் கிரைம் பொலிஸாருக்கு கட்டளை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. சினிமா பின்னணிப் பாடகியான சின்மயி, சென்னை மாநகர பொலிஸ் கமிஷனரிடம் புகார் ஒன்றை அளித்தார். அந்தப் புகாரில் தனது சமூக வலை தளத்தில், சிலர் ஆபாசமாக பேசுகின்றனர். மிரட்டல் விடுக்கின்றனர் என கூறியிருந்தார்.

இதையடுத்து, சென்னை, நிப்ட் கல்லூரியின் இணை பேராசிரியர் சரவணகுமார் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் கைது செய்யப்பட்டார். அவர் மீது இந்திய தண்டனைச் சட்டம், பெண்களை துன்புறுத்துவதை தடுக்கும் சட்டம், தகவல் தொழில்நுட்ப சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு நவம்பர் 1ஆம் திகதி எழும்பூர் நீதிமன்றம் சரவணகுமாருக்கு பிணை வழங்கியது.

தன் மீதான வழக்கை இரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றம் சரவணகுமார் தாக்கல் செய்த மனுவில் சமூக நலனுடன் மனிதாபிமானத்துடன், நேர்மறையான அணுகுமுறையுடன் செயல்படுபவன். சின்மயி அளித்த புகாரின்படி என் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. பெண்ணை துன்புறுத்தல் மிரட்டல் எதுவும் செய்யவில்லை. என் மீதான வழக்கை இரத்து செய்ய வேண்டும். இவ்வாறு, மனுவில் கூறப்பட்டுள்ளது.


# எம்.எஸ். விஸ்வநாதனுக்கு டாக்டர் பட்டம்



இசையமைப்பாளர் எம்.எஸ். விஸ்வநாதனுக்கு, நெல்லை பல்கலை சார்பில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்படுகிறது. நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் 20ஆவது பட்டமளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை நெல்லை அபிசேகபட்டியில் உள்ள பல்கலை வளாகத்தில் நடக்கிறது. பட்டமளிப்பு விழாவிற்கு ஆளுநரும் பல்கலைகளின் வேந்தருமான ரோசையா தலைமை வகிக்கிறார். இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் முதன்மை கட்டுப்பாட்டு அதிகாரி விஞ்ஞானி சிவதாணுப்பிள்ளை பட்டமளிப்பு உரை நிகழ்த்துகிறார். தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் பழனியப்பன் சிறப்புரையாற்றுகிறார். தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை இயற்றியவர் மனோன்மணியம் சுந்தரனார். அந்த பாடலுக்கு இசையமைத்தவர் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன். அவருக்கு நெல்லை பல்கலை சார்பில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்படுகிறது.

# இந்திய இராணுவ வீரர்களை பாகிஸ்தான் இராணுவம் கொல்லவில்லை

— ஹினா ரபானி —



இந்திய வீரர்கள் 2 பேரை பாகிஸ்தான் இராணுவம் கொல்லவில்லை என்று அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் ஹினா ரபானி கர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், பாகிஸ்தான், இந்தியாவுக்கு இடையேயான உறவை மேம்படுத்த கடந்த 4 ஆண்டுகளாக எங்கள் அரசு பாடுபாட்டு வருகிறது.

இந்நிலையில் இந்தியாவில் இருந்து வரும் அறிக்கைகள் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளன. பாகிஸ்தான் எல்லைக்குள் நுழைந்து இந்திய இராணுவம் நடத்திய தாக்குதலில் எங்கள் இராணுவ வீரர் லான்ஸ் நாயக் அஸ்லாம் கொல்லப்பட்டார்.

அப்போது வழக்கமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தான் எங்கள் அரசு எடுத்தது. பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சரோ, அல்லது பொறுப்பில் இருப்பவர்களோ எந்த ஒரு அறிக்கையும் விட்டதை யாரும் பார்த்திருக்க முடியாது. இங்கு நடத்தப் பட்ட விசாரணையில் 2 இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப் பட்டதற்கு பாகிஸ்தான் இராணுவம் பொறுப் பில்லை என்பது தெரிய வந்துள்ளது.

என்ன சொல்வது என்றே தெரியவில்லை. நாங்கள் விசாரணையை முடித்து விட்டோம். இதை இந்தியா நம்பா விட்டால் மூன்றாவது நாட்டை வைத்து விசாரணை நடத்தலாம் என்றார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# எங்களால் உணவளிக்க இயலாது
# சிரியாவில் ஐ.நா. கைவிரிப்பு

United Nations

சிரியாவில் இடம்பெற்று வரும் தொடர் மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள சுமார் 10 இலட்சம் பேருக்கு உணவு விநியோகிப்பது இயலாத காரியமென என ஐ.நா. சபையின் உணவு அமைப்பு அறிவித்துள்ளது. அந்நாட்டின் எல்லைப் புற நகரங்களை கிளர்ச்சியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். முக்கிய நகரங்களில் இரவு பகலாக சண்டை நடப்பதால், அத்தியாவசிய பொருட்களின் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. போதிய பாதுகாப்பு இன்மையால் ஐ.நா. தன் அலுவலர்களை அங்கிருந்து மீளப்பெற்றுள்ளது. பல மாதங்களாக நீடிக்கும் சண்டையில், 60 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஐந்து இலட்சம் பேர், அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். தொழிற்சாலைகளும், வர்த்தக நிறுவனங்களும், போரின் காரணமாக மூடப்பட்டிருப்பதால், மக்கள் வருவாயின்றி, ஐ.நா. சார்பில் அளிக்கப்படும் உணவை, பயன்படுத்தி வருகின்றனர்.

சிரியா ஜனாதிபதி ஆசாத், விடுத்துள்ள அமைதி திட்டத்தை, கிளர்ச்சியாளர்கள் நிராகரித்து விட்டனர். இதனால், சிரியாவில் மோதல் நிறுத்தம் ஏற்படுவதற்கான சூழல் இல்லை. நாளுக்கு நாள், இலவச உணவை எதிர்பார்க்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சிரியாவில் சேவையில் ஈடுபட்டுள்ள செம்பிறை சங்கத்தினர், 25 இலட்சம் பேருக்கு உணவு தேவைப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ஐ.நா. உணவு அமைப்பின் தகவல் தொடர்பாளர், எலிசபெத் பிர்ஸ் குறிப்பிடுகையில், நாங்கள் பெருமுயற்சி எடுத்து, 15 இலட்சம் பேருக்கு உணவு வழங்க திட்டமிட்டுள்ளோம். ஆனால், மீதமுள்ள 10 இலட்சம் பேருக்கு எங்களால் உணவு அளிக்க முடியாது என தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# புதிதாக 461 கிரகங்கள்; கண்டுபிடித்தது நாசா

புதிதாக 461 கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நாசா மையம் தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் கெப்லர் என்ற செயற்கை கோளை விண்ணில் செலுத்தியுள்ளது. அதில் பொருத்தப்பட்டுள்ள சக்தி வாய்ந்த டெலஸ கோப் காமிரா விண்வெளியில் உள்ள புதிய கோள்கள் மற்றும் நட்சத்திரங்களை போட்டோ எடுத்து பூமிக்கு அனுப்பி வருகிறது.

கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2011 மார்ச் மாதம் வரை 461 புதிய கிரகங்களை கெப்லர் கண்டு பிடித்துள்ளது. இவற்றில் 4 கிரகங்கள் பூமியைவிட 2 மடங்கு சிறியதாக உள்ளன. இவை சூரிய மண்டலத்திற்குள் சுற்றி வருகின்றன. இவற்றின் மேல் பரப்பில் திரவ வடிவில் தண்ணீர் இருப்பதும் கண்டறியப் பட்டுள்ளது. எனவே சமீபத்தில் கண்டறியப்பட்டுள்ள கிரகங்கள் உயிரினங்கள் வாழ தகுதியுடையவைகளாகவே உள்ளன.

இவை தவிர 1 இலட்சத்து 50 ஆயிரம் புதிய நட்சத்திரங்களையும் கெப்லர் செயற்கை கோள் கண்டு பிடித்து போட்டோ எடுத்துள்ளது. இவை அதிக வெளிச்சத்துடன் திகழ்கின்றன.

# இளம் பெண்களை மிரட்டி வல்லுறவு; சீன ஓவியருக்கு மரண தண்டனை



இளம்பெண்கள், சிறுமிகளை மிரட்டி பலாத்காரம் செய்த சீன ஓவியருக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கிழக்கு சீனாவின் அன்ஹுய் மாகாணத்தில் ஓவிய பயிற்சி மையம் நடத்தி வந்தவர் ஹு.

இவரது மையத்தில் படிக்க வரும் இளம்பெண்கள், பாடசாலை மாணவிகளுடன் நட்புடன் பழகி, அவர்கள் பற்றிய விபரங்களை தெரிந்து கொள்வார்.

பின்னர் இளம்பெண்களின் படத்தை கணனி மூலம் மார்பிங் செய்து ஆபாச படங்களாக மாற்றுவார்.

இதை அவர்களிடம் காட்டி, தன்னுடன் உறவு வைத்துக் கொள்ளாவிட்டால் அந்தப் படங்களை இணையத்தில் வெளியிட்டு விடுவேன் என மிரட்டி தன் காரியத்தை சாதித்து வந்துள்ளார்.

அவர்களுக்கு தெரியாமல் ஹோட்டல் அறையில் மினி வீடியோ கமரா வைத்து படம் எடுத்துள்ளார். அதை காட்டியும் மிரட்டி அந்த பெண்களுடன் பலமுறை உறவு வைத்துள்ளார்.

இதில் பெண் ஒருவர் கொடுத்த புகாரின் போரில், பொலிஸார் கைது செய்தனர், இதனையடுத்து நடத்தப்பட்ட விசாரணையில் கடந்த 2005ஆம் ஆண்டு முதல் 2011 வரை 23 பெண்களை அவர் மிரட்டி பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கியது தெரியவந்தது.

இதனை தொடர்ந்து சுஸ்ஹு நகர நீதிமன்றத்தில் நடந்த வழக்கில், ஹுவுக்கு மரண தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்ய உள்ளதாக ஹு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

# கப்பல் மோதி விபத்து: 50 பேர் படுகாயம்

அமெரிக்காவின் நியூயோர்க் நகர துறைமுகத்தில் கப்பல் மோதியதில் 50 பேர் படுகாயமடைந்தனர்.

அமெரிக்காவின் நியூயோர்க் மன்ஹாட்டன் துறைமுகத்தில், தளத்தை இடித்த படி சீ ஸ்ட்ரீக் வால் ஸ்ட்ரீட் என்ற கப்பல் வேகமாக மோதியது.

இதனால் வெடிகுண்டு வெடித்தது போன்று பயங்கர சத்தம் கேட்டதுடன், மோதிய வேகத்தில் பலர் தூக்கி வீசப்பட்டனர், இதில் 50 பேர் படுகாயமடைந்தனர்.

பொலிஸாரும், தீயணைப்பு படையினரும் விரைந்து வந்து மீட்புபணியில் ஈடுபட்டனர்.

# விமானம் மீது தாக்குதல்; உயிர் தப்பினர் பயணிகள்.



ஆப்கானிஸ்தானிலிருந்து பாகிஸ்தான் நகரை நோக்கிச் சென்ற விமானத்தின் மீது தீவிரவாதிகள் ரொக்கெட் வீசி தாக்குதல் நடத்தியது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிலிருந்து பாகிஸ்தானின் பலுசிஸ்தான் உள்ள குவெட்டா நகருக்கு 44 பயணிகள் கொண்ட விமானம் புறப்பட்டது.

காபூல் விமான நிலையத்திலிருந்து புறப்பட தயாரானதும், விமானத்தின் மீது ரொக்கெட் குண்டு வீசி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இருப்பினும் விமானத்துக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. எனவே அதில் பயணம் செய்த 44 பயணிகளும் உயிர் தப்பினர்.

இதனையடுத்து ஒரு மணிநேரம் கழித்து, விமானம் புறப்பட்டு சென்றது. இதற்கிடையே, ஆப்கானிஸ்தானின் ஹெல்மண்ட் மாகாணத்தில் உள்ள இங்கிலாந்து படைத்தளத்தில் இராணுவ வீரரை .ஆப்கான் வீரர் சுட்டுக் கொன்றார்.

இத்தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாதிகள் பொறுப்பேற்று உள்ளனர். இராணுவத்தில் ஊடுருவி தங்களது ஆள் தான் இங்கிலாந்து வீரரை சுட்டுக் கொன்றதாக தெரிவித்துள்ளனர்.

# மாணவர்களின் நடமாட்டத்தை கண்காணிக்கும் மைக்ரோ சிப் - நீதிமன்றம் அனுமதி



அமெரிக்க பாடசாலைகளில், மாணவர்களின் நடமாட்டத்தை கண்டறிய, அடையாள அட்டையில் பொருத்தப்பட்டுள்ள, "மைக்ரோ சிப்" நடைமுறைக்கு, நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. அமெரிக்காவின், சில மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில், அடையாள அட்டையில், "மைக்ரோ சிப்" பொருத்தப்பட்டு, ஜி.பி.எஸ். தொழில்நுட்ப முறைப்படி, மாணவர்களின் நடமாட்டம் கண்காணிக்கப்படுகிறது.

வகுப்புகள் துவங்குவதற்கு முன்னும், மணி அடித்த பிறகும், வராத மாணவர்கள் எங்கிருக்கின்றனர் என்பதை அறிந்து, அதற்கேற்ப, அவர்களது வருகை பதிவேட்டில், "பிரசன்ட்" அல்லது, "ஆப்செண்ட்" போடப்படுகிறது. கடந்த, 2005ஆம் ஆண்டே, கலிபோர்னியா மற்றும் ஹுஸ்டன் மாகாணங்களில், இந்த நடைமுறை அறிமுகப்படுத்தப் பட்டது. ஆனால், கடும் எதிர்ப்பால், இந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டது. ஆனால், டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில், இந்தத்திட்டம் தற்போதுநடைமுறையில் உள்ளது.

# தாய்க்காக கன்னித்தன்மையை விற்கும் பெண்



தனது தாயின் மருத்துவ செலவுகளுக்காக பிரேசிலைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் கன்னித்தன்மையை விற்கவுள்ளதாக இணையத்தில் விளம்பரத்தை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

பிரேசிலை சேர்ந்த பெண் ரெபோக்கா பேனார்டோ(வயது 18). இவரது தாய் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து தனது கன்னித்தன்மையை விற்கவுள்ளதாக இணையத்தில் விளம்பரமொன்றை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து இவரது தாய், எனது மகள் தொழில் புரிய வேண்டும். இதனைவிடுத்து விபச்சாரியாக மாறிவிடக் கூடாது என்று தெரிவித்துள்ளார்.

# வரலாறு காணாத வெப்பம்; பற்றி எரிகிறது அவுஸ்ரேலியா



அவுஸ்ரேலியாவில் வரலாறு காணாத வெயில் அடித்ததால் ஆங்காங்கே புல் புதர்கள் தீ பற்றி எரிந்தன. இதனால் பல வீடுகளும் தீயில் எரிந்து நாசம் ஆகின. அவுஸ்ரேலியாவில் உள்ள நியூ சவுத் வேல்ஸ், விக்டோரியா மற்றும் டாஸ்மானிய மாகாணங்களில் அவசர நிலை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. சிட்னி அமைந்துள்ள நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் இன்றைய வெயில் 42.3யிஇ தொட்டது. அத்துடன் பலத்த அனல் காற்றும் வீசியதால் பல இடங்களில் உள்ள புல் புதர்கள் மள மள வென தீ பிடித்து எரியத் தொடங்கின.

தீயுடன் பலத்த காற்று வீசியதால் தீ கட்டுக்கடங்காமல் 75 ஹெகடர் தூரம் பரவின. நியூ சவுத் வேல்ஸ், விக்டோரியா மற்றும் டாஸமானிய மகாணங்களில் 600இற்கும் மேற்பட்ட தீ அணைப்பு வண்டிகள் மற்றும் ஹெலிகொப்டர்கள் தீ அணைக்க போராடி வருகின்றன. இந்த தீயில் இரண்டு வீடுகள் முற்றிலும் எரிந்து நாசம் ஆகின. இன்னும் பல இடங்களில் இந்த தீ, சிறிய ஊர் களை சுற்றிலும் சூழ்ந்து எரிந்து கொண்டு இருப்பதால் அவர்கள் தங்கள இருப்பிடத்தை விட்டு வெளியில் வர இயலாமல் உள்ளனர்.

# கட்டாக்காலிகளின் தொல்லை நெல்வயல்களுக்கு ஆபத்து

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் கட்டாக்காலி மாடுகளால் ஒருபகுதி நெல்வயல்கள் நாசம் செய்யப்பட்டுள்ள நிலையில் அந்த வயல் பகுதிகளைக் கைவிட வேண்டிய நிலை தோன்றியிருப்பதாக அப்பகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மண்டைதீவு பிரதான வீதியின் மேற்குப் பகுதியில் நெற்பயிர்ச் செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்களில் இரவு வேளைகளில் இவ்வாறு கட்டாக்காலி மாடுகள் புகுந்து அவற்றை நாசம் செய்துவருகின்றன.

இதன் காரணமாக சில வயல்கள் முழுமையாக நாசம் செய்யயப்பட்டுள்ளது. இவ் நெல வயல்களைக் கைவிடும் நிலை தோன்றியுள்ளது. மழைச் சூழலில் புற்தரைகளில் மழைநீர் நிறைந்து காணப்படுவதால் இந்தக் கட்டாக்காலி மாடுகள் வயல் நிலங்களில் கூட்டம் கூட்டமாகப் புகுந்து பாதுகாப்பு வேலிகளையும் சேதப்படுத்தி நெற்பயிர்களை நாசப்படுத்தி வருகின்றன எனவும் அப்பகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர. இம்முறை நெற்பயிர்கள் நல்ல நிலையில் விளைந்திருந்த போதும் கட்டாக்காலி மாடுகளால் சில விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# மீண்டும் தலையெடுக்கிறது டெங்கு இரு நாட்களில் மூவர் பாதிப்பு

டெங்குநோய்த் தொற்றிற்கு இலக்காகிய மேலும் மூன்று பேர் நேற்றும் நேற்று முன்தினமும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவ் வைத்தியசாலையின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு நேற்று பருத்தித்துறையில் இருந்து ஒருவரும் நேற்று முன்தினம் யாழ். மாநகரப் பகுதியில் இருந்து இருவருமாக மூவர் அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலை யின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த வருடத்தில் தை மாதம் இதுவரை இவ்வாறு டெங்குநோய்த் தொற்றுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலை, மற்றும் ஏனைய வைத்தியசாலைகளிலும் சுமார் 25 பேர் வரை சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரியவருகிறது. (பா)



சங்கரத்தை மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபமானது தற்போது பெய்துவரும் மழைக்கு மத்தியில் வெள்ளநீர் சூழ்ந்து காணப்படுவதை இங்கு காணலாம். வெள்ள அபாயம் காரணமாக இங்கு நடைபெறும் முன்பள்ளி வகுப்புகளுக்கு பிள்ளைகளை அனுப்புவதற்குப் பெற்றோர்கள் அஞ்சுகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

# சிங்கள மொழிபெயர்ப்பு நூல் அறிமுக விழா

படைப்பிலக்கியவாதியும் ஊடகவியலாளரும், சமூகப் பணியாளருமான லெ.முருகபூபதியின் சிறுகதைகளின் சிங்கள மொழிபெயர்ப்பு நூல் 'மதக செவனெலி' (நினைவின் நிழல்கள்) அறிமுகவிழா நாளை 12 ஆம் திகதி சனிக்கிழமை மினுவாங்கொடையில் உடுகம்பொல கொரஸ கிராமத்தில் ஸ்ரீசுதர்மானந்த விகாரை மண்டபத்தில் மாலை 3.00 மணிக்கு நடைபெறும.

தற்பொழுது அவுஸ்ரேலியாவில் புலம்பெயர்ந்துவாழும் முருகபூபதியிடம் 1974 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொரஸ கிராமத்தில் தமிழ் கற்ற சிங்கள மாணவர்களும் பௌத்த பிக்குகளும் இந்நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளனர்.

எழுத்தாளர் திக்குவல்லை கமாலின் ஏற்பாட்டில் ஆனமடுவ தோதன்ன பதிப்பகம் வெளியிட்டுள்ள இந்நூலை முன்னாள் அதிபரும் மொழிபெயர்ப்பாளருமான ஜனாப் ஏ.ஸி.எம். கராமத் சிங்களத்தில் மொழிபெயர்த்துள்ளார். இந்நூலின் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் கொழும்பில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் செயற்குழுக்கூட்ட அறையில் நடைபெற்றது.

கொரஸ கிராமத்தில் ஸ்ரீசுதர்மானந்த விகாராதிபதி வண. கடுவஸ்கொட சோமிந்த தேரர் தலைமையில் நாளை நடைபெறும் அறிமுகவிழாவில் மினுவாங்கொடை கல்லொழுவை இலக்கிய வட்டத்தின் தலைவர் கலாபூஷணம் மு.பீர், ஊடகவியலாளர் எம்.ஏ.எம்.நிலாம், திக்குவல்லை கமால ஏ.ஸி.எம்.கராமத், திருமதி பத்மசீலி குணதிலக்க ஆகியோர் உரைநிகழ்த்துவர. முருகபூபதி ஏற்புரை வழங்குவார்.

தமிழ் இலக்கிய அபிமானி அமரர் வண.ரத்னவன்ஸ தேரோ அவர்களுக்கு குறிப்பிட்ட மொழிபெயர்ப்பு நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் தேரோ அவரகளின் உருவப்படமும் திரைநீக்கம் செய்யப்படும்.

# நான்கு மாவட்டங்களில் அபாய எச்சரிக்கை

நிலவும் சீரற்ற காலநிலையால் நான்கு மாவட்டங்களில் உள்ள சில பிரதேசங்களுக்கு 24 மணிநேர அனர்த்த அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா, மாத்தளை, கண்டி மற்றும் பதுளை ஆகிய நான்கு மாவட்டங்களில் சில பகுதிகளுக்கே இவ்வாறு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் வலப்பனை, கொத்மலை மற்றும் நுவரெலியா பிரதேச செயலாளர் பகுதிகளுக்கும் கண்டியில் மெதும்பர, பாதஹேவாகெட்ட, கங்கவடகொறள ஆகிய பகுதிகளுக்கும் 24 மணிநேர அனர்த்த எச்சரிக்கை விடுககப்பட்டுள்ளது.

## செஞ்சோலை...

பணிப்பாளர் த.சி.பத்மநாதன் கலந்துகொண்டு இவ் இல்லத்தை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார். இச்சிறுவர் இல்லத்தில் யுத்தத்தினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் பெற்றோரை இழந்த பெண் பிள்ளைகள் இணைத்துக் கொள்ளப்பட்டு அவர்களுக்குச் சிறந்ததொரு எதிர்காலத்தைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் இச்சிறுவர் இல்லம் இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 3 வருடங்களாக வவுனியா வைரவப் புளியங்குளத்திலுள்ள சிறுவர் இல்லத்துடன் இச்சிறுவர் இல்லப் பிள்ளைகளும் இணைந்து தற்காலிகமாக வசித்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (04)

## நம்பிக்கையில்லாத்...

அழுத்தங்கள் கவலையளிக்கும் வகையில் அமைந்துள்ளன. பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மறறும் நம்பிக்கையில்லாத் தீர்மான யோசனை முன்வைக்கப்பட்ட காலம் ஆகியன சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அநாகரிக செயலுக்கு...

கடந்த காலத்திலும் இவ்வாறான வன்முறைகளை நாம் வன்மையாகக் கண்டித்தே வந்திருந்தோம். யுத்தம் ஓய்ந்த சூழலில் இவ்வாறான அணுகு முறைகள் எந்த விமோசனத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை. இந்தச் சம்பவத்துடன் யார் சம்பந்தப்பட்டாலும் நாம் இந்த நாகரிகமற்ற கோழைச் செயலை வன்மையாகக் கணடிக்கிறோம் என்றும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## இலங்கை விவகாரத்தில்...

முரண்பாட்டு நிலைமைகளின் போது அரசியல் பிரச்சினைகள் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு போன்றன குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது.

இறுதிக் கட்ட யுத்த நிலைமைகளின் போது பொதுமக்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பில் இலங்கை விவகாரம் தொடர்பில் அண்மையில் சார்ள்ஸ் பெட்ரீ வெளியிட்ட அறிக்கையை கவனத்திற்கொள்ள முடியும்.

சேத விபரங்களை அறிந்து கொள்ளல், பொதுமக்களை யுத்த வலயங்களிலிருந்து வெளியேற்றல் போன்றன தொடர்பில் அரசாங்கங்களுக்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டியது அவசியமானது என்பதனை பெட்ரீ அறிக்கை வலியுறுத்தி உள்ளது.

ஒவ்வொரு நிலைமையையும் ஐக்கிய நாடுகள் அமைப்பு ஓர் சவாலாகவே நோக்க வேண்டும். முரண்பாட்டு நிலைமைகளின் போது உலக சமூம் அவதானித்துக் கொண்டிருக்காது என்பதனை நினைவில் நிறுத்திக்கொண்டு பணியாற்ற வேண்டும் எனவும், அதுவே ஐக்கிய நாடுகள் அமைப்பு எதிர்நோக்கும் பிரதான சவால் எனவும் அவர தெரிவித்துள்ளார்.

## வடமராட்சியில்...

அதிகாலை நெல்லியடி மாலுச்சந்திப் பகுதியில் இடம்பெற்றது. இப்பத்திரிகையை விநியோகத்திற்காக எடுத்துச்சென்ற மேற்படி பத்திரிகை நிறுவனத்தின் பணியாளரும் இச் சம்பவத்தின்போது தாக்கப்பட்டிருப்பதுடன் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் பத்திரிகைக் கட்டுடன் போட்டு எரிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை 5 மணியளவில் மேற்படி பத்திரிகை விநியோகத்தர் நெல்லியடியிலுள்ள தமது பத்திரிகை விற்பனை நிலையங்களில் பத்திரிகையை கொடுத்துவிட்டு மாலுசந்தி வழியூடாகச் சென்றுகொண்டிருந்தவேளை 5.15 மணிளவில் மாலுச்சந்தி வைரவர் கோவிலுக்கும் சதாபொன் கல்வி நிறுவனத்திற்கும் .இடையில் வைத்து 3 மோட்டார் சைக்கிளில் வந்த 4 இனந்தெரியாத நபர்கள் குறித்த நபரைத் தள்ளி விழுத்திவிட்டு தாக்கினர். என்றும் அவர், அவர்களிடமிருந்து தப்பியோடி அவ் வீதியூடாக வந்த தனியார் பேருந்து ஒன்றில் ஏறி நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தனது முறைப்பாட்டைச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குறித்த நபர் தப்பியோடியதை அடுத்து இனந்தெரியாத நபர்கள் அவர் வந்த மோட்டார் சைக்கிளையும் பத்திரிகைகளையும் தீயிட்டுக் கொழுத்தியுள்ளனர். இதில் மோட்டார் சைக்கிளும் பத்திரிகைகளும் தீக்கிரையாகின. (12,18)

## குற்றப்பிரேரணை...

பிரேரணை தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் எவ்விதத் தடைகளுமின்றி தொடர்ந்து இடம்பெறும் என்று அறிவித்தார்.

இந்த நிலையில் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை நாடாளுமன்றத்தில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் முன்வைக்கப்பட்டது. இந்த யோசனையை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த வழிமொழிந்தார் என்பதோடு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கேல் பெரேரா, மேற்படி யோசனைக்கு எதிராக நீண்டநேரம் கருத்துக்களை வெளியிட்டார்.

இதேவேளை குற்றப்பிரேரணை மீதான விவாதத்திலிருந்து ஜனநாயகத் தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்துள்ளனர். இந்த விவாதத்தில் கலந்துகொண்டு அரசாங்கத்துடன் கூட்டுசேர தாம் விரும்பவில்லையெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுரகுமார திஸாநாயக்க, அர்ஜுன ரணதுங்க, டிரான் அலஸ், விஜித்த ஹேரத், சுனில் ஹந்துன்நெத்தி, ஜயந்த கெட்டகொட ஆகியோரே இவ்வாறு வெளிநடப்புச் செய்துள்ளனர்.

இச்செயல்முறை முழுவதுமே குறைபாடுகளைக் கொண்டுள்ளதென்பதுடன், இது அரசியலமைப்புக்கு முரணானதெனவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. எனவே இதில் நாம் ஒரு பகுதியாக இருக்க விரும்பவில்லையெனவும் ஆகையால் நாடாளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்வதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம் என ஜனநாயகத் தேசிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இந்த நிலையில் விவாதம் இன்றும் இடம்பெற்று மாலை 6.30 மணிக்கு வாக்கெடுப்பிற்கு விடப்படும்.

# சூடுபிடிக்கும் ஷிராணி விவகாரம்
# ஏட்டிக்கு போட்டியான ஆர்ப்பாட்டங்கள்



(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை நேற்றைய தினம் நாடாளுமன்றில் நடைபெற்ற அதேவேளை பிரதம நீதியரசருக்கு ஆதரவு தெரிவித்தும், எதிராகவும் நேற்றைய தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

மேன்முறையீட்டு நீதிமன்றம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை இரத்துச் செய்யுமாறு தீர்ப்பளித்தபோதிலும், அந்தத் தீர்ப்பை மீறும் வகையில் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை நேற்றைய தினம் நாடாளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதனைக் கண்டித்து நேற்றைய தினம் அகில இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சேவைப் புறக்கணிப்பை மேற்கொண்டது.

இதனால் நீதிமன்றங்களின் செயற்பாடுகள் நாடளாவிய ரீதியில் ஸ்தம்பிதமடைந்தன. இந்த நிலையில் பிரதம நீதியரசருக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பு நீதிமன்றப் பகுதியிலிருந்து சட்டத்தரணிகள் மேற்கொண்ட ஆர்பபாட்டப் பேரணி பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டது.

நாடாளுமன்றத்தை நோக்கி ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்ல முற்பட்டபோது பொலிஸ் மற்றும் விஷேட அதிரடிப் படையினரால் இவர்கள் தடுக்கப்பட்டனர்.

இதனால், லேக் ஹவுஸ் சுற்றுவட்டத்திற்கு அருகில் கூட்டமொன்று இடம்பெற்றது. இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கலைந்து சென்றனர்.

இதேவேளை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக நேற்று நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் அரச ஆதரவாளர்கள் தொழிற்சங்கங்கள் இணைந்து ஆர்ப்படாட்டப் பேரணியை நடாத்தினர்.

நாடாளுமன்றத்தில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்தே இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# ரிசானாவின் சடலம் சவுதியில் அடக்கம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கைப் பணிப்பெண்ணான ரிசானா நபீக்கின் சடலம் அந்த நாட்டிலேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டிலுள்ள இலங்கை தூதரகம் அறிவித்துள்ளது.

சவுதியில் 4 வயதுக் குழந்தையை கொலை செய்ததாக குற்றம் சுமத்தி மரண தண்டனை விதிக்கப்பட்ட ரிசானா நபீக் நேற்று முன்தினம் கழுத்து வெட்டி கொலை செய்யப்பட்டார்.

இந்நிலையில், ரிசானாவின் சடலத்தை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கோரிக்கை விடுத்தது. எனினும் சவுதி அரசாங்கத்தின் சட்டத்திற்கு அமைய சடலத்தை இலங்கைக்கு அனுப்பி வைக்க முடியாதென சவுதி அரசாங்கம் அறிவித்துவிட்டது.

இதனால் ரிசானாவின் சடலம் சவுதி அரேபியாவிலே நல்லடக்கம் செய்யப்பட்டதாக இலங்கை தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

# இனங்களுக்கிடையில் ஒற்றுமை வலியுறுத்தி ஜே.வி.பி. துண்டுப்பிரசுரம்

(வவுனியா)

அனைத்து மக்கள் மத்தியிலும் ஒற்றுமையை கட்டியெழுப்புவதுடன் இனவாத, மதவாதக் கலவரத்திற்கு மீண்டும் இடமளியோம் எனக் கூறி மக்கள் விடுதலை முன்னணியினர் வவுனியாவில் நேற்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன், அந்தக் கட்சியின் வவுனியா அமைப்பாளர் உட்பட பல ஆதரவாளர்கள் இணைந்து துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

இத்துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது பேரன்புக்குரிய தாயகமும் அதில் வாழும் சிங்கள தமிழ், முஸ்லிம், மலே, பேகர் உள்ளிட்ட அனைவரும் தற்போது பாரிய சமூக பொருளாதார, அரசியல் நெருக்கடியின் பாதக விளைவுகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ச்சியடைந்துவரும் இந்த நெருக்கடிகளால் பொது மக்கள் பாதிப்படைந்து வருகின்றனர்.

ஒருபுறத்தில் விலைவாசி கூடும் நிலையில் சம்பளம் அதிகரிக்கப்படாததன் காரணத்தால் பொதுமக்கள் பொருளாதார நெருக்கடிக்கும் பல்தேசிய கம்பனிகள் பொருளாதாரத்தை விழுங்குவதால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் சீரழிந்தும் உள்ளனர்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இனவாத பிரிவினைவாத யுத்தத்தால் அழிவடைந்திருக்கும் மக்கள் என்ற வகையில் இனியும் அதேவகையான கலவரங்களுக்கு இடமளிக்காது உணர்ச்சிவசப்படாது புத்தியால் சிந்தித்து மக்கள் முகம் கொடுக்கும் மக்கள் எதிர்நோக்கும் உண்மையான சவால்களை இனங்கண்டு அவற்றை வெற்றி கொள்வதற்காகவும் அதற்காக மக்கள் மத்தியில் ஒற்றுமையை கட்டியெழுப்பவதற்காகவும் உயிரோட்டத்துடன் பங்களிப்புச் செலுத்துமாறும் அனைத்து இன, மத, மக்களையும் கோருகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 14 வயதில் காணாமற்போனவர் 22 வயதில் வீடு திரும்பினார்

வவுனியாவில் 8 வருடங்களுக்கு முன்னர் காணாமற்போனதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் மீண்டும் திரும்பி வந்துள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

செட்டிகுளம், நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த தர்மலிங்கம் தினேஷ்குமார் என்பவரே இவ்வாறு காணாமல் போன நிலையில் கடந்த 8 ஆம் திகதி வீடு திரும்பியுள்ளார்.

இவர் கடந்த 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி தனது தாயாருடன் வைத்தியசாலைக்குச் சென்றிருந்த வேளையிலேயே காணாமல் போயிருந்தாரெனவும் இது தொடர்பில் இவரது தாயார் செட்டிக்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தாரெனவும் பொலிஸார் கூறினர்.

இவர் 14 வயதில் காணாமல் போன நிலையில் 22ஆவது வயதில் திரும்பியுள்ளார்.

இவர் கொழும்பிலுள்ள ஹொட்டலொன்றில் இதுவரை காலமும் பணியாற்றிவந்ததாக இவ்விளைஞர் கூறியதாகவும் பொலிஸார் கூறினார்.

# ரிசானாவிற்கு மரணதண்டனை; ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் ரிசானா நபீக்கிற்கு கழுத்து வெட்டி, மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமைக்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

ரிசானாவை விடுதலை செய்யுமாறு பல தரப்பில் இருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதும் சவுதி அரசு மரண தண்டனையை நிறைவேற்றியதாக ஐரோப்பிய ஒன்றியம் கண்டித்துள்ளது.

ரிசானாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட செய்தியை கேட்டு தான் உண்மையில் கலக்கமுற்றதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார பொறுப்பு தலைமை அதிகாரி கெத்தரின் ஏஸ்டன் தெரிவித்துள்ளார்.

ரிசானாவை மரணதண்டனையில் இருந்து விடுவிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் பல தடவைகள் சவுதி அரசிடம் கோரிக்கை முன்வைத்ததாக கெத்தரின் ஏஸ்டன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலைக்குற்றம் இடம்பெற்ற வேளையில் ரிசானா ஒரு சிறிய பெண் என அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ரிசானாவின் மரணத்திற்காக அவரது குடும்பத்தினருக்கு, குழந்தையை இழந்த குடும்பத்தினருக்கும் அனுதாபங்களை தெரிவிப்பதாகவும் ரிசானாவின் மரணத்தால் குழந்தையின் பெற்றோரின் இழப்பு குறைக்கப்படும் என தான் நம்பவில்லை எனவும் கெத்தரின் ஏஸ்டன் குறிப்பிட்டுள்ளார்.

## தூதுவர் அழைப்பு

சவுதி அரேபியாவின் ரியாத்திலுள்ள இலங்கைத் தூதுவர் அஹமட் ஜவாத் மீள் அழைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

ரிசானாவின் மரண தண்டனைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே சவுதி அரேபியாவின் ரியாத்திலுள்ள இலங்கை தூதுவர் திருப்பி அழைக்கப் பட்டார் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்.

# பற்றைக் காட்டிலிருந்து இராணுவ வீரரின் சடலம் மீட்பு

வவுனியா, நாவற்குளம் கிராமத்திலுள்ள பற்றைக் காட்டிலிருந்து இராணுவ வீரரொருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

ஹிங்குராங்கொட பகுதியைச் சேர்ந்த ஏ.எம்.பிரியந்த குமார (வயது - 31) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து இச்சடலம் மீட்கப்பட்டதாகவும் இவர் பூநாவை பகுதியிலுள்ள இராணுவ முகாமொன்றில் கடமையில் இருந்தாரெனவும் மதவாச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கடந்த டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி காணாமற்போயிருந்தாரெனவும் இது தொடர்பில் இவரது தாயார் கடந்த 6 ஆம் திகதி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்ததாகவும் பொலிஸார் கூறினர். சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

# தூக்கில் தொங்கிய சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநகர் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

திருநகர் இராஜசிங்கம் வீதியைச் சேர்ந்த அன்ரனி ஜோன்சன் (வயது - 23) என்ற இளைஞனின் சடலமே நேற்று மாலை மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (25)


## மரண அறிவித்தல்



**அமரர்**
**சின்னராசா திரவியம்**
**(பழம்)**

வி.சி.சி. மாவிட்டபுரம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், கே.கே.எஸ். வீதி அச்சக வீதி மருதனார்மடம் (பிரதேச சபைக்கு அருகாமை) தற்காலிக முகவரியாகவும் கொண்ட அமரர் சின்னராசா திரவியம் (பழம்) 05.01.2013 அன்று காலமானார்.

அன்னார் அன்னலீலா (மல்லிகா), வசகரன் (பயில்வான்), மனோகரன் (வண்ணம்), குணசேகர் (பவளத்துரை), பானுதேவன் (பாலுத்துரை), தங்கலீலா (றேகா), சந்திரலீலா (மேகலா), இந்திரலீலா (சோபனா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயம் புஸ்பராணி, மங்களகௌரி, ரவி, றொபின்சன் (குன்றன்), சிறிக்குமார் ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று காலை 11.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அச்சக வீதி,**
**மருதனார்மடம்** (C/1777) **தகவல்**
**குடும்பத்தினர்.**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஜனவரி 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.